# மெக்காலே பிரபு

ஆக்கியோர் :

P. S. இராஜன்

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

ஜார்ஜ் டவுன், சென்னை.

1937

பதிப்புரிமை]

[விலை அணு 7

# BOOKS REFERRED

1. Life & Letters of Lord Macaulay, *by Sir George Otto Trevelyan.*

2. Dictionary of Modern England.

3. Encyclopaedia Brittanica.

4. Chamber's Encyclopaedia.

5. Everyman's Encyclopaedia.

6. History of English Literature, Vol. II *by M. Taine.*

7. Critical Miscellanies, *by John Morley.*

8. Public Life of Lord Macaulay, *by Frederick Arnold.*

9. English Men of Letters, *by T. Cotter Morrison.*

# முகவுரை

மெக்காலே, நம் தாய் நாட்டுக்கு வந்து நம்மவர்க்குச் சில தொண்டுகள் புரிந்த பெரியார் ஆதலின், இவரது அரிய வரலாறு நம்மவர் படித்து இன்புறல் அவசியமாகும். இவர், எளிய குடும்பத்தில் பிறந்து அனைவரும் போற்றும் பிரபு திலகமானார்; இறுதிவரை திருமணம் புரிந்து கொள்ளாமல், தம் வாழ்க்கை முழுவதையும் கல்வியிலேயே ஈடுபடுத்தினார்; கொடிய வறுமை வந்துற்றபோதும், கடன் பெறாமல், தம் அறிவின் உழைப்பைக்கொண்டே செம்மையான வாழ்வு நடத்தினார். இவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர்; அடிமை வழக்கம் ஒழியப் போராடினார்; பொது மக்களுக்கு அரசியல் விஷயங்களில் அதிக உரிமை கோரி வெற்றிபெற்றார்.

மூன்று வயது முதல் உயிர்போமளவும் நூலுங் கையுமாக இருந்து, புலவர் சிகாமணியாய் மிளிர்ந்த மெக்காலே பிரபுவின் வாழ்க்கை வரலாறு, மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் ஊட்டி வாழ்வினைச் செப்பம் செய்ய வழி கோலுவதாயுளது. இப் புதிய—அரிய—தமிழ் நூலினைத் தமிழ் உலகம் நன்கு மதிக்குமென்னும் துணிபுடையேன்.

அன்பன்,

P. S. இராஜன்

# பொருளடக்கம்


| பொருள் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | இளமைப் பருவம் | ... | .... | 1 |
| 2. | பாராளுமன்ற அங்கத்தினர் | | .... | 17 |
| 3. | சிறந்த சொற்பொழிவுகள் | | .... | 24 |
| 4. | இந்தியாவில் புரிந்த தொண்டு | | .... | 36 |
| 5. | அமைச்சர் தொழில் | .... | .... | 57 |
| 6. | இறுதிக்காலம் | .... | .... | 77 |
| 7. | குணாதிசயங்கள் | .... | .... | 82 |
| 8. | அவரது பெருமை | .... | .... | 95 |

# மெக்காலே பிரபு

## 1. இளமைப் பருவம்

நம் நாட்டு இளைஞர்கள் சிறப்புற, அவர் தம் செவ்விய வாழ்வு நலன்பெற, மாண்பு மிக்க பெரியாரின் சீரிய வாழ்க்கை வரலாறுகளைப் படித்து அறிதல் வேண்டும். இந்நாட்டு அறிஞரின் பெருஞ் செயல்களைப் போன்று, பிறநாட்டு அறிஞரின் அருஞ் செயல்களையும் நாம் படித்து அறிதல் நம் வாழ்வு நலனுக்கு விழுமம் செய்வதாகும். 'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்னும் வள்ளுவர் வாக்கை மெய்ப்பிக்க என்றே தோன்றினரோ என வியக்க வல்ல வாழ்வு நடாத்திய பெரியார்கள் இந்நாட்டிலும் பிற நாட்டிலும் அவ்வப்போது தோன்றி மறைதல் உண்டு. அச்சீரியர்களுள் லார்டு தாமஸ் பாபிங்டன் மெக்காலே என்னும் அறிஞர் ஒருவர். அவரது வரலாறு இளைஞர் உள்ளத்தைக் கவர்ந்து, அவர்தம் ஊக்கத்தைப் பெருக்கி, கல்வியில் ஆர்வம் ஊட்டத்

தக்கதாய் அமைந்துளது. அதனை நம்மனோர் அனைவரும் அறிதல் நலம்.

தாமஸ் பாபிங்டன் மெக்காலே, இங்கிலாந்தில் உள்ள ரோத்லீ டெம்பிள் என்ற இடத்தில் 1800-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் நாளன்று தம் பெற்றோருக்கு மூத்த குமாரராய்ப் பிறந்தார். மெக்காலே, 'விளையும் பயிர் முளையிலே' என்பது போன்று மூன்று வயது முடியா முன்னரே, தாம் நுண்ணறிவு மிகுந்தவர் என்பதைப் பிறர் அறியச் செய்தார். அவருக்கு, அறிவுத்திறனும் நூல்கள் மாட்டு அன்பும், படித்தவற்றைச் சிறிதும் மறவாமல் தக்க சமயத்தில் அப்படியே உபயோகப்படுத்தும் திறமையும் அச்சிறு வயதில் இருந்தன எனின், எவர்தாம் வியப்பு அடையாமல் இருத்தல் கூடும்? அவர், அம்மூன்றாவது வயதில்-மழலைச் சொற்கள் மாறாத காலத்தில்-தமக்குப் பிரியமான சிறு நூல்களை எடுத்துக்கொண்டு போய் வாசித்தல் வழக்கம். படிப்பே அவரது உயிராக இருந்தது. படிக்கும்போது ஒரு துண்டு ரொட்டியும் வெண்ணெயும் கையில் வைத்துத் தின்றுகொண்டே இருப்பதில் அவருக்கு விருப்பம் அதிகமாம்.

மெக்காலே, தம்மை ஒத்த சிறுவர்களுடன் வெளியே உலவச் செல்லும்போ

தெல்லாம் தாம் படித்த நூல்களில் மிகக் கடின மானவைகளாய் உள்ள கதைகளைத் தவறின்றி யும், ஒன்றையும் விடாதபடியும், கேட்பவர் உணரும்படியும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவார். அவருடைய ஞாபகச் சக்தியினைக் கண்டு அனைவரும் வியந்தனர். அவர் தமது செவிலித்தாயுடன் பேசும்போதும் நூல்களில் தாம் படித்த சொற்களை அப்படியே எடுத் தாளுவர். ஒரு முறை ஹன்னு என்ற சீமாட்டி அவர் வீட்டுக்கு வந்தாள். அச்சமயம் வீட்டில் மெக்காலேயின் பெற்றோர் இல்லை. ஏடுங் கையுமாய் இருந்த மெக்காலே அச்சீமாட்டிக்கு நல்வரவு கூறி, அழைத்து வந்து ஓர் ஆசனத் தில் அமரச் செய்து, "பழைய மது அருந்து கின்றீர்களா?" என்று கேட்டார். மது வென்றால் இன்னது என்றே அறியக் கூடாத அத்துணைச் சிறு வயதுடைய குழந்தை இவ் வாறு கேட்பதறிந்த அச்சீமாட்டி வியப் புற்று, "தம்பீ! பழைய மது என்றால் என்ன என்று நீ அறிந்தனையோ?" என்று கேட்டாள். மெக்காலே பின் வாங்கினர் இல்லை; "எனக்கு நன்றாகத் தெரியுமே! ராபின்ஸன் குரூஸோ தம் மிடம் எப்போதும் அத்தகைய மதுவை வைத் துக்கொண்டிருப்பது வழக்கம்" என்று விடையளித்தனர்.

மெக்காலே, ஒரு முறை தம் தந்தையாருடன் ஸ்டிராபெரி ஹில் என்ற இடத்தில் வசித்திருந்த வால்டி கிரேவ் என்ற சீமாட்டி இல்லத்திற்குச் சென்றிருந்தார். அங்கு ஓர் ஊழியன், மெக்காலேயின் கால் மீது சூடு மிக்க பானம் ஒன்றைக் கை தவறிக் கொட்டிவிட்டான். வால்டி கிரேவ் சீமாட்டி மனம் பதைத்து, அச் சிறுவருக்குச் சிகிச்சை செய்து, அவரிடம் அதிக அன்புடன் நடந்துகொண்டார். சிறிது நேரம் கழித்து, அச்சீமாட்டி மெக்காலேயை நோக்கி, "எரிச்சல் அடங்கிற்ரு? இன்னும் வலிக்கிறதா?" என்று கேட்டபோது, சிறுவர், "சீமாட்டியே, வணக்கம். என் நன்றி உமக்கு உரியதாகுக. வலி குறைந்து வருகிறது" என்று தெளிந்த நடையில் உச்சரிப்புப் பிறழாமல் விடை அளித்தார். அது கண்ட அச்சீமாட்டி சொல்லொணு வியப்படைந்தனர்.

மெக்காலே ஐந்தாமாண்டில் பள்ளிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். கிரேவஸ் என்பவர் நடத்திவந்த பள்ளிக்குத்தான் முதன் முதலாக மெக்காலே சென்று படித்தார். ஆனல், படிக்கும்போது ஒரு கையில் நூலும் மற்றொரு கையில் ரொட்டித் துண்டும் வைத்துத் தின்றுகொண்டே படிக்கும் வழக்கத்தை நிறுத்தல்

வேண்டும் என்று அவர் அன்னையார் கூறினார்; பள்ளிக்கூடத்தில் பல பிள்ளைகட்கு முன் கையில் ரொட்டி வைத்திருப்பதே தவறு என்றும் எடுத்துக்காட்டினார். மெக்காலே உடனே அன்னையார் சொற்களுக்குப் பணிந்தார்: “அன்னையீர்! இனி இடையரு ஊக்கமே என் ரொட்டித் துண்டாகவும், கவனஞ் செலுத்திப் படிப்பதே அதற்குரிய வெண்ணெயாகவும் கருதி நடப்பேன்” என்று அன்னையார் உவப்ப உருவகப்படுத்திக் கூறினார். இக் கூற்று, இதனைப் படிக்கும் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் வியப்பாலும், களிப்பாலும் நிரப்பும் என்பதில் ஐயமில்லை. அவர் இத்துணைத் திறமையினராய் இருந்தும் பள்ளிக்குச் செல்ல விரும்பிலர்; இல்லத்திலேயே இருந்துவிட அனுமதிக்கும்படி தம் அன்னையாரிடம் பன்முறை கெஞ்சியுள்ளார்; அவருக்கு, ஆரம்பத்தில் பள்ளிக்கூடம் செல்வது வேம்பாய் இருந்தது; ஆனால், பிற்காலத்தே அவரைப் போன்று ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்றவர்கள் அவர் காலத்தில் எவருமிலர். அவருக்கு ஆரம்பத்தில் மட்டும் பள்ளிக்கூடத்தில் வெறுப்பேற்படக் காரணம் என்ன? அவருக்குத் தம் விருப்பப்படி நூல்கள் படிப்பதில் ஆர்வம் அதிகம். அவர்,

வெறுங் கருவி போன்று குறிப்பிட்ட சில பாடங்களை மட்டும் நெட்டுருப்பண்ணி ஒப்பு வித்து விடுவதை விரும்பவில்லை. எனவே, அவர் தம் விருப்பப்படி ஆங்கில நூல்கள் பலவற்றைப் படித்து வந்தார். இவ்வாருக, மெக்காலே எட்டு வயதடையா முன்னர், தம் தாய் மொழியாகிய ஆங்கிலத்தில் முதற்றர மான புலமை பெற்ருர். மெக்காலே உரை நடை இயற்றுவதிலும், பாக்கள் புனைவதிலும் அவ்வெட்டாம் ஆண்டிலேயே தக்க திறமை அடைந்திருந்தார் என்பது பத்தொன்பதாம் நூற்ருண்டின் அதிசயம் எனவே கூறுதல் வேண்டும்.

மெக்காலே ஏழாம் வயதில் 'உலக சரித் திரம்' எழுதினர். இவ்வுரைநடை நூல் இரு பத்தினன்கு பக்கங் கொண்டது. அவர் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் ஒன்றைக்கூட விட்டிலர்; உலக ஆரம்பத்தி லிருந்து பத்தொன்பதாம் நூற்ருண்டு ஆரம் பம் வரையுள்ள குறிப்புகள் அச்சிறு நூலில் அடங்கி இருந்தன. அதன் பின் கிறித்துவ சமயங் குறித்து, இதர சமயங்களைவிட அது எவ்வகையில் உயர்ந்தது என்பதை விளக்கி ஒரு கட்டுரை எழுதினர்; 'செவியத்துப் போர்' என்ற கவியை மிக விரைவில் எழுதி முடித்

தார். அவர் இரண்டே நாட்களில் முந்நூறு வரிகளை எழுதி முடித்தனராம்; 'மோனுவின் வெற்றி' என்ற பெயருடன் தம் குடும்பத்தின் வீரச் செயல்களைக் குறித்து ஒரு செய்யுள் எழுதினுர்; பிறகு 'பிங்கால்' என்ற பெயர் கொண்ட செய்யுள் நூல்கள் பன்னிரண்டு செய்தார்.

இத்துணையும் எட்டு வயது கடக்கா முன் எழுதப்பட்டவை. ஒவ்வொரு நூலும், உரை நடையே ஆயினும் செய்யுளே ஆயினும் மெக்காலேயின் சிறந்த அறிவையும், நிறைந்த கல்வியையும் விளக்கிக்கொண்டிருந்தது. இவற்ரேடு பள்ளிப் படிப்பிலும் அவர் தவறிலர். இத்துணை நூல்களும் பள்ளிப் பருவத்தில் கிடைத்த அவகாசத்தில் எழுதப்பட்டும் அவற்றில் சொற்பிழையோ, எழுத்துக் குற்றமோ, இலக்கண வழுவோ ஒன்றும் காணக் கிடைத்திலது.

மெக்காலேயின் அறிவு வளர்ச்சிக்குக் குறை உண்டுபண்ணக் கூடியது ஒன்றும் நிகழாமல் அவருடைய பெற்ரேர்கள் கவனித்துவந்தனர். அவருக்கு உடற்கட்டும், மூளை வன்மையும், சுறுசுறுப்பும், விடா முயற்சியும் ஏற்படுத்தக் கூடிய உணவுப் பொருள்கள் தாம் அளிக்கப்பட்டுவந்தன. மெக்காலே ஒரு

பெரிய அறிஞராய்த் திகழுவர் என்பதை அவர் பெற்றோர்கள் அறிந்திருந்தனர் எனினும் அதனை அவர் அறியும்படி நடந்துகொண்டிலர். மெக்காலேயும் தாம் வரம்பிகந்த வல்லமையாளராய் இருப்பதாக அறிந்திலர். அவருக்குத் தம் பெற்றோரின் ஆதரவுடன் ஹன்னுமோர் என்ற சீமாட்டியின் அன்பும் ஆதரவும் கிடைத்தன. அவ்வம்மையார் மெக்காலேயின் கல்வி, உடல்நலம் முதலிய விஷயங்கள் அனைத்திலும் மிக்க கவலை செலுத்தினர்; தம் வீட்டுக்கு மெக்காலேயை அடிக்கடி அழைத்துச் செல்வார்; அடிக்கடி இருவரும் கடிதங்கள் எழுதிக்கொள்வது வழக்கம். மெக்காலேயின் நூல் நிலையத்தில் புதிய நூல்கள் பல சேர்க்கப்பட்டமைக்கும் அவர் பல அரிய கலைகள் எல்லாம் பயின்றமைக்கும் இவ்வம்மையாரே காரணரென்று கூறல் தவருகாது.

இவ்வாறு பன்னிரண்டு வயது கழிந்தபின் மெக்காலே, கேம்பிரிட்ஜுக்கு அருகிலுள்ள லிட்டில்ஷேப்போர்டு என்ற கிராமத்தில் உள்ள பள்ளி ஒன்றனுக்கு அனுப்பப்பட்டார். மெக்காலே, அங்கு ஆறு ஆண்டுகள் வரை பயின்றார். முன்னைவிட அதிக நூல்களை இடைவிடாமல் படித்த அவர், தம் பதினெட்டாம் பிராயத்தில் ஒரு பெரும் கலைக்குன்ருய்

விளங்கினர். மெக்காலேயின் திறமையை அறிந்த இராணியார் கல்லூரியின் தலைமை ஆசிரியர் டீன் மில்னர் என்பவர், 'மெக்காலே குடி மக்கள் முன் அன்றி, அரசர்கள் முன் நிற்கும் பெருமை உடையவர்' என்று கூறினர். மாணவர்களுக்கெல்லாம் மெக்காலே மீது விருப்பம் அதிகம். 'நட்புக்கு நாயகம்' என்றே அனைவரும் அவரை மதித்தனர். தர்க்க வாதங்களில் அவர் மிக்க விருப்பங்காட்டுவது உண்டு; ஆனல், அவரைச் சொற்போரில் வெல்ல எவராலும் முடிவதில்லை.

மெக்காலேயினிடம் ஓர் அற்புதச் சக்தி இருந்தது. அவர் எந்நூலையும் ஒருமுறை படித்துவிட்டால், மனப்பாடம் செய்யாமலே அந்நூல் முழுவதும் அவர் ஞாபகத்தில் அப்படியே இருக்கும். ஒரு சிறு புள்ளிகூட அவர் ஞாபகத்தைவிட்டுத் தவருது. ஸர் வால்டர் ஸ்காட் என்ற பேராசிரியர் எழுதிய "லே"(Lay of the Last Minstrel) என்ற நூலையும் மில்டன் என்ற பேராசிரியர் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' (Paradise Los) என்ற நூலையும் 'யாத்ரிகனின் பிரயாணம்' (Pilgrim's Progress) என்ற நூலையும் ஒவ்வொரு முறையே படித்தும் அவை அவர் மனத்தில் அப்படியே பதிந்துபோயின. பின் குறிப்பிடப்பட்ட இரு நூல்களின் பிர

திகள் அனைத்தும் எக்காரணத்தாலேனும் ஒன்றுகூட விடாமல் அழிக்கப்பட்டு விடினும் ஒரு சிறு மாறுதலும் தவறும் இன்றித் தம்மால் அப்படியே அவ்விரு நூல்களையும் ஒப்புவிக்க முடியும் என்று மெக்காலே ஒருமுறை கூறினார். இவ்வளவு சிறந்த அறிவு இருந்தும் மெக்காலேக்குக் கணக்கு என்றால் எட்டிக் கொட்டையைச் சுவைப்பது போலவே இருந்தது. கணக்கால் எந்த மனிதனும் எத்தகைய நன்மையும் அடைய முடியாது என்பது அவர் கருத்து. அவர், மனமாரக் கணக்கை வெறுத்து, அதனால் துளி நன்மையும் கிடைப்பதில்லை என முடிவு கட்டியதுடன் அதை ஒரு கலை என்று கூறவும் மறுத்துவிட்டார். அவர் கணிதம், ஜோதிடம் ஆகியவை அசுர சாத்திரங்கள் என்று எண்ணினார்; அதனைப் படிப்பதே தமக்குப் பெருந் துரதிருஷ்டம் என்றும் காலத்தை வீணாகக் கழிப்பதாகும் என்றும் நினைத்தார்; எனினும், பரீட்சையில் கணிதம் பற்றிய வினாக்களும் உண்டு ஆதலால் விடா முயற்சியுடன் கணிதத்தைப் படித்துத் தேர்வுகளில் முதற்றரமாகவே தேர்ச்சி பெற்று வந்தார். மெக்காலே நகர வாழ்வில் விருப்பம் காட்டினாரே அன்றித் தம் கிராமத்தில் வாழ்வதை விரும்பிலர்; ஹெர்ட்போர்டுஷயரின் தெளிந்த

காற்றையும், 'ரிப்' ஆற்றின் பளிங்குபோன்ற நீரையும்விட, இலண்டனின் புகை நிறைந்த காற்றையும் தேம்ஸ் ஆற்றின் கலங்கல் நீரையுமே பெரிதும் விரும்பினர்.

மெக்காலேக்குத் தம் உடன் பிறந்தார் மாட்டு அன்பு மிகுதியாக இருந்தது. அதே போல அவர்களும் அவரிடம் அதிக அன்பு பாராட்டி வந்தனர். மெக்காலே விடுமுறை நாட்களில் வீட்டுக்கு வருவது அவர்களுக்கு ஒரு விழாவாகவே இருக்கும். அவர் எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவார். அவர் கற்பனைக் கதைகளைப் படிப்பதில் அதிக விருப்பம் காட்டிலர்; எனினும், தம் உடன் பிறந்தாரைத் தம்மைச் சூழ வைத்துக் கொண்டு நற்கதைகளை உரத்துப் படித்துக் கேட்பிப்பார்; சில சமயங்களில் தம் உடன் பிறந்தாருடன் உலவச் செல்வார். அவர், மழைக்காலத்தில் கண்பொத்தி ஆடும் விளையாட்டில் பிரியங் கொண்டவர்.

மெக்காலேயின் தந்தை ஜேகாரி மேக்காலே என்பவர் பெரிய அரசியல் வாதி; அடிமை வழக்கத்தை ஒழிக்கப் பெரும் முயற்சி எடுத்து உழைத்த சீர்திருத்தக்காரர்; பல பொது நிலையங்கட்குப் பெருந் தொகைகள் கொடுத்து உதவிய அறப் பாதுகாவலர். அவர் அடிக்கடி

வில்பர்போர்ஸ், தாரண்டன் போன்றவர்களையும் இதர பிரமுகர்களையும் தம் இல்லத்திற்கு அழைத்து, அவர்களுடன் அரசியல் விஷயங்களைக் குறித்தும், சீர்திருத்தச் செயல்களைப் பற்றியும் சுயநல நோக்கமற்றுப் பேசிக் கொண்டிருப்பர். மெக்காலே அவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தனர் ஆதலால், பிற்காலத்தே சிறந்த நாட்டுப் பற்றுடன் விளங்கினர்; நீதி வழுவா நேர்மையாளராகத் திகழ்ந்தார்; பரநலமே வாழ்வின் சிறந்த குணமெனக் கருதினர். இவ்வாருக, மெக்காலே தம் இளமைப் பருவத்தை அரிய நூல்களைப் படிப்பதிலும் அவற்றை உணர்ந்து, ஞாபகத்தில் வைத்துக் கொள்வதிலும் தந்தையாருடைய அரசியல் பேச்சுகளைக் கவனிப்பதிலுமாகக் கழித்துவந்தார்.

மெக்காலே, தமது பதினெட்டாம் வயது ஆரம்பத்தில் 1818-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கலாசாலையில் மாணவராகச் சேர்ந்தார். அவருக்கு அக்கலாசாலை உயிராக இருந்தது. அக்கலாசாலையில் படிப்பதும் தங்கியிருப்பதும் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அவரோடு படித்துக்கொண்டு இருந்தவர்களுள் டேர்வேண்ட், ஹென்றீ நெல்சன், பிரேட், சார்லஸ் ஆஸ்

டின் என்னும் நால்வர் பிற்காலத்தே சிறப் படைந்து விளங்கினார்கள். அவர்கள் அனை வரும் மெக்காலேயின் அரிய தோழர்களா கவே இருந்தனர். மெக்காலே 'அரிய இன்பம் எது?' என்பது குறித்து ஆஸ்டினுடன் தர்க் கிப்பது வழக்கம்; ஒர்ட்ஸ்வோர்த்தின் கவிநயம் என்பது பற்றி மற்றுமிரு நண்பர்களுடன் வாதாடுதல் வழக்கம்; இங்ஙனம் அவர் கலா சாலைத் தோழர்களைச் சந்திக்குந் தோறும் சொற்போர் நிகழ்த்தியதானது, பிற்காலத்து அவரை ஒரு சிறந்த சொற்பொழிவாள ராக மிளிரச் செய்தது. மெக்காலே, கலா சாலை மாணவர் சங்கத்துச் சொற்போர் போட்டிகளிலெல்லாம் கலந்துகொண்டு வாதாடத் தவறுவதில்லை; மெக்காலேயை எதிர்த்துப் பேச, பிரேட் ஒருவர் தாம் முன் வருவது வழக்கம்.

மெக்காலே, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை யால் நன்கு கௌரவிக்கப்பட்டார். அவருக்கு இருமுறை அத்தியக்ஷகரின் பொற்பதக்கம் அளிக்கப்பட்டது. இந்த இரு முறைகளிலும் அவர் அழகிய கவிகள் புனைந்ததற்காகவே பொற் பதக்கங்கள் பெற்றார். அவருக்கு, இவற்றுடன் கிரேவன் சர்வகலாசாலை உபகாரச் சம்பளமும் கிடைத்தது. இவை அனைத்தும்

அவருக்குப் பெருஞ் சிறப்பை அளித்தன. சில ஆண்டுகள் கழிந்த பின்னர் அவருக்குச் சர்வ கலாசாலையின் 'உறுப்பினர் உரிமை' (Fellowship) கிடைத்தது. கிடைத்தற்கு அரிய ஒரு பெரும் கௌரவமாகிய இது, மெக்காலேக்கு அளவற்ற உவகையை உண்டுபண்ணிற்று. அவ்வமயம் அவர் அடைந்த மகிழ்ச்சியை எடுத்து உரைக்கச் சொற்கள் கிடைத்தில. இத்துணைப் பெருமைகளை அடைந்த மெக்காலே, அனைவராலும் ஒரு பெரிய கலாவல்லுநராக—நுண்ணறிஞராக — மேதாவியாகக் கருதப்பட்டார். உழைப்பின் பலன் வீணாதலும் உண்டோ?

மெக்காலே மிகுந்த சுறுசுறுப்புள்ளவர்; காலத்தை வீணாக்குவதை அறவே வெறுப்பவர்; இடையறா உழைப்பினர்; தாம் இன்புறுவதுபோல உலகு இன்புறக்காணும் கருத்து உடையவர். ஆகவே, அவர் கல்வி பயின்று கொண்டே மற்றும் இரு மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் வேலையையும் மேற்கொண்டார். ஒன்பது மாதங்கள் வரை அவ்விரு மாணவர்களுக்கும் பயிற்சி அளித்தல் வேண்டியிருந்தது. அதற்காக மெக்காலே நூறு கினிகள் ஊதியமாகப் பெற்றுக்கொண்டார். அவர் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கலா

சாலையில் சேர்ப்பிக்கப்பட்ட பின், அவருடைய பெற்ருேருக்குச் செலவு பெருகியது. அவர் இதை உணர்ந்து தமக்குக் கிடைத்த வருவாயைத் தம் பள்ளிச் செலவில் ஈடுபடுத்திப் பெற்ருேரின் செலவில் ஒரு பகுதியைக் குறைத்தார்.

ஒரு முறை மெக்காலேயின் தந்தையார் தம் ஊரில், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை மாணவர் சிலரைச் சந்தித்தபோது, "எம் குமாரர் எங்ஙனம் கல்வி பயிலுகிருர்?" என்று வினவினர். அவர்கள் அதிருப்திகரமான விடை அளிக்கவே, ஜெகாரி மெக்காலே மனம் வருந்தித் தம் குமாரருக்கு ஒரு கடிதம் எழுதினுர். அதற்கு மெக்காலே எழுதிய விடை கவனித்தற்கு உரியது:

"அன்பின் மிக்க தந்தையீர், வணக்கம். கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் கணிதப் பகுதிகள் பல உள. மாணவர்களுட் பலர் கணிதமொன்றினைத் தவிர்த்துப் பிறிது ஒன்றும் அறிந்திலர். அத்தகையவர் சமூகத்திலும் வாழ்விலும் வெற்றி பெறுதல் இயலுமா? கணிதம் பயிலும் அம்மாணவர்கள் கலை நூல்கள் அவ்வளவையும் கற்பனைக் கதைகளுக்கு ஒப்பாக அன்ருே எண்ணுகின்றனர்! கலை பயிலும் மாணவர்களைக் 'கதைகள் படிப்போர்'

என்று அவர்கள் அழைக்கின்றனர். அழுக்காற்றின் மீது, அறியாமையின் காரணமாக அவர்கள் இங்ஙனம் எல்லாம் கூறுகின்றனர். இதுபோலவே உலக இயற்கையும் இருக்கிறது. இவ்வுலகு, பேரறிஞர்களை ஒதுக்கி, மதிப்பார் அற்ற நிலையில் தள்ளிவைத்து, ஒன்றுக்கும் உதவாத வாய்ச் சொல் வீரர்களை ஞானிகள் என்றும் உயர்ந்தோர் என்றும் கூறுகிறது. ...............தங்களுக்கு உரைத்த அம்மாணவர்களின் கூற்று என்னை மேலும் ஊக்கம் அடையவே செய்கின்றது. நான் காலத்தை வீணிற் கழிக்கின்றேனா என்பது நாளடைவில் தங்களுக்குப் புலனாகும். என் அன்பார்ந்த தந்தையீர், நான் என் கடமையினின்றும் பிறழ்வேனா? என்றும் பிறழமாட்டேன் என்பதை நம்புமாறு தங்களை வேண்டிக்கொள்ளும்,

தங்கள் அன்புக்குரிய தனயன்,

மெக்காலே.

## 2. பாராளுமன்ற அங்கத்தினர்

மெக்காலே தம் தந்தையாரைப் போன்று சீர்திருத்தங்கள் செய்வதில் அதிக ஊக்கங் காட்டி வந்தார். அவர், அடிமை கொள்ளும் வழக்கத்தைத் தம் தந்தையாரை விட இருமடங்கு அதிக வன்மையாகக் கண்டித்தார். 1824-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அடிமை ஒழிப்புக்கழக ஆண்டு விழாக் கூட்டம் நடைபெற்றது. அதற்குக் கிளாஸ்டர் ஷயர் பிரபு தலைமை வகித்தார். மெக்காலே அவ்விழாவில், மக்களை அடிமைகளாக வாங்குவதும் விற்பதுமான தீய வழக்கம் ஒழிக்கப்படல் வேண்டும் என்பது குறித்துச் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்தார். அவர் அங்கு ஆற்றிய சொற்பொழிவானது கூட்டத்திற்கு வந்திருந்தோர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

'எடின்பர்க் ரெவ்யூ' என்ற பத்திரிகை அப்போது மக்களுடைய ஆதரவை அதிகம் பெற்றிருந்தது. அதன் ஆசிரியர் நல்ல திறம் படைத்த அறிஞர்களிடமிருந்து கட்டுரைகள் வாங்கி வெளியிட்டு வந்தார். அப்பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதிக் கொடுக்கும்

படி அப்பத்திரிகாசிரியரிடமிருந்து மெக்காலேக்கு விண்ணப்பம் ஒன்று கிடைத்தது. மெக்காலே முதன் முதலாக, ஆங்கிலப் பேராசிரியர் மில்டன் என்பாரைப்பற்றி அரிய கட்டுரை ஒன்று எழுதி அப்பத்திரிகையில் வெளிவரச் செய்தார். 1825-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அம் முதல் கட்டுரை 'எடின் பர்க் ரேவ்யூவில்' வெளி வந்தது. சொல் நயம், பொருள் நயம், எழுத்து வன்மை, நடையழகு முதலியன செறிந்த அக்கட்டுரை, அவ்வொரே நாளில் மெக்காலேக்குப் பெரும் புகழுண்டாக்கிவிட்டது. 'நாளை நாம் பூலரால் போற்றப் படுவோம்' என்பதை அறியாமல் இரவு படுக்கச் சென்ற மெக்காலே மறுநாள் விடியும் பொழுதே உலகம் போற்றும் உயர் புகழ் பெற்றார். 1812-ல் பைரன் பிரபு எழுதிய 'சைல்டி ஹேரால்டு' என்ற நூல் எப்படி அவருக்குத் திடீரெனப் பெருங்கீர்த்தி உண்டு பண்ணிற்றோ அங்ஙனமே, மெக்காலே மில்டனைக் குறித்து எழுதிய கட்டுரை, தாம் எதிர் பாரா விதமாக அவருக்குப் பெரும்புகழையும் கீர்த்தியையும் ஏற்படுத்திற்று.

இங்ஙனம் அவர் புகழ் பரவத் தொடங்கவே, இலண்டன்மா நகரின் பல பகுதிகளிலிருந்து விருந்துக்கு வருமாறு அவருக்கு

அழைப்புகள் வந்து குவிந்தன. 'எடின்பர்க் ரெவ்யூ' ஆசிரியர் மெக்காலேயைப் புகழ்ந் தார்; அவர் உரைநடை அழகை வியந்து பாராட்டினர். மேலும் மேலும் தொடர்ந்து பல கட்டுரைகளைத் தம் பத்திரிகைக்கு எழுதி உதவுமாறு விண்ணப்பித்துக்கொண்டார்; அதற்காகப் பொருள் உதவி செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார். ஆகவே, மெக்காலே அப்பத்திரிகைக்குத் தொடர்ந்து கட்டுரைகள் பல எழுதி வந்தார். இதன் மூலம் ஆண்டு தோறும் அவருக்கு இருநூறு பவுன் வரு மானம் கிடைத்துவந்தது.

மெக்காலே 1826-ஆம் ஆண்டில் முதன் முதல் பாரிஸ்டர் (வழக்கறிஞர்) தொழிலில் புகுந் தார். ஆனல், அவருக்கு அத்தொழிலில் ஆர் வம் ஏற்படவில்லை. அவர் பொய்யை மெய்யாக வும், சட்டங்களையும் நீதியையும் நெறியை யும் புரட்டி நியாயத்தை அநியாயமாகவும் குற்றம் புரிந்தவனை நல்லவனுகவும் எடுத்து வாதிக்கும் முறையை விரும்பவில்லை. அவர், சொல்வன்மையினுல் பொய்யை மெய்போல் வாதித்துப் பொருளீட்டிப் புகழ் அடையும் வாழ்வை அடியுடன் வெறுத்தார். இங்ஙனம் போலி வாழ்வு நடத்தி, பெருநிதி திரட்டிச் செல்வராக இருப்பதனைவிட, உண்மை நெறி

யில் உழைத்து, உத்தம வாழ்வு நடத்தும் வறி யனாக இருத்தலே சாலச் சிறந்தது என்பது அவரது கருத்து. எனவே, பாரிஸ்டர் மெக் காலேயிடம் வழக்குகள் மிகுதியாக வருவ தில்லை. அவரும் அத்தொழிலில் ஊக்கம் கொள்ளவில்லை.

மெக்காலேக்குப் பொது வாழ்வில் ஈடு படல் வேண்டும் என்ற பேரவா இருந்தது. ஆனால், அவர் குடும்பத்தின் செல்வ நிலை அவ ரது அவாவினை நிறைவேற்ற இடந்தரவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் அவரது தந்தை யார் செல்வந்தராய் இருந்தனர்; எனினும், இவ்வமயம் அவர் குடும்பத்தில் வறுமை இடம் பெற்றுவிட்டது; மெக்காலேயின் உடன் பிறந்தவர்களைத் தக்க நிலையில் வளர்ப்பதற் குப் போதிய வருமானமே இல்லாமற் போய் விட்டது. குடும்பத்தில் மூத்த மகனாய்ப் பிறப்பவனுக்குத்தான் குடும்பப் பொறுப்பும் தொல்லையும் ஏற்படுவது உலக வழக்கு. அந் நிலை தான் மெக்காலேக்கும் ஏற்பட்டது. அவர் தந்தையார் ஜெகாரி மெக்காலே பெரிய சீர் திருத்தக்காரராய், சுய நலமற்ற அரசியல் வாதியாய், நாட்டுப் பற்று மிக்காராய், அற நெறி வழுவாதவராய், கொடை வள்ளலாய் வாழ்க்கை நடத்தவே, பிற்காலத்தே வருவாய்

குன்றி, அவருக்கு வசை மாலையும் வைதிகர் வெறுப்புமே கிடைத்தன. அவர், வருமானம் அற்றவராகிவிடவே, வறுமை அக்குடும்பத்தில் தலையிடத் தொடங்கிற்று. எனினும், மெக்காலே இவற்றிற்கெல்லாம் மனம் தளர்ந்தாரிலர்; குடும்பப் பொறுப்பை ஏற்று நிர்வகிக்க அஞ்சினரிலர்; மகிழ்வுடன் அத் தொல்லைகளை ஏற்றார்; வெற்றியுடன் குடும்பத்தை நடத்திவரலானார்.

அவருக்குக் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கலாசாலை உறுப்பினர் உரிமை (Fellowship) மூலம் ஆண்டு ஒன்றினுக்கு முந்நூறு பவுன்கள் கிடைத்தன. இதனுடன் வருவாய்க்கு இன்னொரு வழியும் ஏற்பட்டது. 1828-ஆம் ஆண்டில், வர்த்தகத்தில் நஷ்டமடைந்து, வாங்கிய கடன் தர இயலாதவரைப் பற்றிய காரியங்களைக் கவனிக்கும் அதிகாரியாக (Commissioner of Bankruptcy) நியமனம் பெற்றார்; அதன் மூலம் வருடம் தொள்ளாயிரம் பவுன்கள் வீதம் மூன்று நான்கு ஆண்டுகள் பெற்று வந்தார். இவற்றுடன் 'எடின்பர்க் ரெவ்யூ' பத்திரிகைக்கு அரிய கட்டுரைகள் பல எழுதுவதன் மூலம் ஆண்டுக்கு இருநூறு பவுன்கள் கிடைத்து வந்தன. இவ்வருமானம் அவருக்கும், அவர் குடும்பத்திற்கும் போதிய அள

வுக்கு மீறினதாக இருந்தும், பிரிட்டன் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துப் பொது ஊழியத்தில் பங்கெடுத்துத் தொண்டாற்றல் வேண்டும் என்ற அவரது அவாத் தணிவதற்கு மிகச் சிறிய தொகையாகவே இருந்தது.

மெக்காலே, 'ஜேம்ஸ் மில்' என்பாரைப் பற்றி எழுதிய கட்டுரைகள் இலான்ஸ்டௌன் பிரபுவின் மனத்தைக் கவரவே, அவர் மெக்காலேயைப் பொது வாழ்வில் ஈடுபடுத்தல் வேண்டும் என எண்ணினர். இலான்ஸ்டௌன் பிரபு மிதவாதி; அடிமை வர்த்தகம் அறவே ஒழிதல் வேண்டும் என்று முயன்று உழைத்தவர். அத்தகையவர் மெக்காலேயின் பேச்சு வன்மையையும், எழுத்து வன்மையையும் அறிந்து எவ்வகையிலும் அவரைப் பொது வாழ்வில் ஈடுபடுத்தல் வேண்டும் என்னும் உறுதி பூண்டார்; அதன்படி மெக்காலேக்கு, 1830-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 'கால்னே' தொகுதியில் பாராளுமன்றத்திற்கு ஓர் அபேட்சகராய் நிற்குமாறு கடிதம் ஒன்று வரைந்து அனுப்பினர். இது, மெக்காலேயின் நற்காலத்துக்கு முதல் அறிகுறி என்று கருதப்பட்டது. மெக்காலே, இலான்ஸ்டௌன் பிரபு விருப்பப்படி 'கால்னே' தொகுதிக்குப் பாராளுமன்ற அங்கத்தினராய்த் தேர்ந்

தெடுக்கப்பட்டார். அவர், பாராளுமன்றத்தில் மிதவாதக் கட்சியில் சேர்ந்து புகழ் அடைந்தார்.

மெக்காலேக்குப் பொது வாழ்வில் ஈடுபட்டு உழைத்தல் வேண்டும் என்ற அவா இருந்தது அன்றோ? அவர், தம் விருப்பத்திற்கிணங்க, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நிலைமை ஏற்பட்டது பற்றி மிகவும் குதூகலம் அடைந்தார்; தம்மால் இயன்றவரை பொது நல ஊழியம் புரிதல் வேண்டும் என்று உறுதிபூண்டார்; பாராளுமன்றத்தின் மூலம் ஏழை மக்கள் துயர் களைய எவ்வெவ்வழியிலெல்லாம் முடியுமோ அவ்வவ் வழியிலெல்லாம் முயல்வது என்று முனைந்தார். அன்பர் பணி செய்தல் ஒன்றே அவர் மனத்தின் பெரும் நோக்கமாக இருந்தது.

## 3. சிறந்த சொற்பொழிவுகள்

**பொது** மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்தில் (House of Commons) யூதர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைத் தீர்க்கவென்று, ராபர்ட் கிராண்ட் என்பார் கொண்டுவந்த மசோதா இரண்டாம் முறை வாசிப்புக்கு வந்த அப்போது, (1830-ஏப்ரல்) பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த மெக்காலே எழுந்து யூதர்களின் சார்பில், மசோதாவுக்கு ஆதரவாக அழுத்தம் திருத்த மாகப் பேசினர். அவரது பேச்சு வன்மை இங்கிலாந்தி லிருந்த யூதர்களாலும் மற்றும் வெளிஉலகில் வசித்த யூதர்களாலும் மிகவும் பாராட்டப்பட்டது. மெக்காலே யூதரை ஆத ரித்துப் பொழிந்த சொன் மாரியின் ஒரு பகுதி மட்டும் ஈண்டுக் காண்க:

"யூதர்களிடத்திலிருந்து நீங்கள் வரிகளாக வும் மற்றை இனங்களாகவும் பெரும் பொருள் திரட்டுகின்றீர்கள்; அதற்குப் பதிலாக, அவர் கள்மாட்டு நீங்கள் மாற்ருந்தாய் அன்பையே காட்டுகின்றீர்கள். இவ்வமயங்கூட யூதர்கள் பெரும் செல்வந்தர்களாய் இருப்பதன் மூலம் மிகுந்த சக்தி வாய்ந்தவர்களாய் இருக்கின்ற

னர் ; அவர்களுக்கு, ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவிக்கவோ, பிறிதோர் அரசியல் கட்சியை ஆழ்த்திவிடவோ, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தில் தம் செல்வாக்கைச் செலுத்தவோ, பாராளுமன்றத் தேர்தல்களைத் தங்கள் சார்பில் நடத்தவோ வழிகளும் வசதிகளும் இருக்கின்றன ; அவர்களுடைய செல்வாக்கு, யுத்த அமயங்களில் ஐரோப்பாவின் அச்சாணியையே அசைத்துவிடத் தக்கதாய் அமைந்திருக்கிறது ; மன்னுதி மன்னர்களின் மஹோன்னத திட்டங்களை எல்லாம் உருவாக்கவோ, அல்லது உடைத்து எறியவோ யூதர்களின் செல்வாக்கு உபயோகிக்கப்படலாம். இது, மறுக்க முடியாத—தெளிந்த—அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட உண்மையாய் இருந்த போதினும், நீங்கள்மட்டும் யூதர்களின் அதிகாரம், சக்தி, செல்வாக்கு ஆகியவற்றை மதிப்பதில்லை ; ஏற்பதில்லை ; அவர்களுக்கு நியாயமான—ஒழுங்கான உரிமைகளை அளிப்பதில்லை.

“யூதர்கள் என்னும்போதே நீங்கள், சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட மக்கள் இனத்தவராய் மாறுகின்றீர்கள் என்று தெரிகிறது. யூதர்களுக்கு அட்டூழியம் இழைக்கப்பட்ட அக்காலம் என் கண்முன்

வருகிறது. யூதர்களுக்கு அதிகாரம் பெற உரிமை இல்லை என்று நீங்கள் கூறுகிறீர்களா? 'அவர்கள் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் இருக்கவே உரிமை பெற்றில்லை; அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர், அவர்களுக்குப் பேசக்கூட உரிமை இல்லை' என்றெல்லாம் நீங்கள் கூறலாம். ஆனால் இன்று யூதர்களுக்குச் செல்வத்திற்கு உள்ள சக்தி முழுவதும் உண்டு. இஃது எந்த இங்கிலீஷ்காரரும் அறியாததன்று; இங்ஙனம் அறிந்திருந்தும், யூதர்களுக்கு அரசியல் சுதந்திரம் மறுக்கப்படுவது அநீதி; அரசியல் நிர்வாக பதவிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு மேலும் எதிர்ப்புக் காட்டி வருவதென்பது மிகவும் இழிந்த குணமாகும்; அவர்களை இங்கிலாந்தில் குடியிருக்க அனுமதித்து, செல்வத்தால் உண்டாகத்தக்க எல்லா அதிகாரங்களையும் அவர்களுக்கு அளித்து, ஆனால் இங்கிலீஷ் குடிமக்களுக்குச் சமமாக அவர்களுக்கும் குடியுரிமை அளிக்க மறுப்பதானது அவர்களைப் பாரபட்சமாக நடத்துவதாகவே காணப்படுகிறது. யூதர்களோ பன்னெடுங்காலமாக, தங்களுக்கு இழைக்கப்பட்டு வரும் இன்னல்கள் அனைத்திற்கும் ஈடுகொடுத்து, இங்கிலாந்தையே தங்கள் தாய் நாடெனக் கொண்டு

வாழ்ந்துவருகின்றனர். இங்கிலையில் அவர்களுக்குக் குடி உரிமை அளிக்க மறுப்பது, ஒழுக்கக் கேடான விஷயமாகும். யூதர்கள் குடி உரிமை அளிக்கப்படுதலே நீதி; அதனை அனைவரும் அங்கீகரித்தலே ஒழுங்கு; எனவே, இம் மசோதா சட்டமாக நிறைவேற்றப்படல் வேண்டும்."

இங்ஙனம் மெக்காலே ஓர் அரிய சொன்மாரி பொழிந்து பாராளுமன்ற அங்கத்தினர் அனைவரையும் வியப்படையச் செய்துவிட்டார். அவர் சொற்களின் அழகில் ஈடுபட்ட அங்கத்தினர் மதிமயங்கி விட்டனர்; காந்தத்தின் எதிரிலுள்ள ஊசியேபோல் ஆயினர். எனவே, அந்த மசோதா சட்டமாக நிறைவேறியது. அது முதல், மெக்காலேக்குப் பாராளுமன்றத்தில் பெரும் புகழ் நிலவியது. அவர், 'கால்னெ' தொகுதியின் பிரதிநிதியாய் இருந்த காலம் முழுவதும் ஆறு முறைதான் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். ஒவ்வொரு முறையும், அவருடைய பேச்சின் எழிலை—வன்மையை—பேசும் முறையை—தடை இன்றிக் கரை புரண்டு ஓடிவரும் வெள்ளமே போல வார்த்தைகளை அடுக்கடுக்காக அடுக்கிச் செல்லும் அழகை—கேட்பவர் அயர்வுறாமலும் கூறியது கூறாமலும் இனிமை குறை

யாமலும் பேசும் திறமையை—பேச்சு எக் காரணத்துக்காகப் பேசப்படுகிறதோ அக் காரணம் விடப்படாமலும் சிறு விஷயங்கூடத் தெளிவாகப் புலனாகும் வண்ணமும் எடுத்துக் காட்டும் இயல்பை எவர் தாம் பாராட்டாது இருத்தல் கூடும்!

மெக்காலே 'கால்னெ' தொகுதியின் பிரதிநிதித்துவக் காலம் முடிவு அடைந்து மறு தேர்தல் நடைபெறுமுன், பிரான்ஸில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் பிரான்ஸில் பல இடங்களுக்குச் சென்றார்; எங்கும் அவர் நன்கு உபசரித்துப் பாராட்டப்பட்டார். அவர் பாரிஸ் சென்றபோது, அங்கிருந்த பிரதம மந்திரியாரும் பிற மந்திரிகளும் பிரமுகர்களும் நல்வரவேற்று உபசரித்தனர். மெக்காலே இங்கிலாந்தை விட்டு இதர நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்கெனப் புறப்பட்டது இதுதான் முதன் முறை. கற்றவருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பன்றோ?

மெக்காலேயின் சொற்பொழிவுத் திறனை விளக்க வல்ல ஒரு சந்தர்ப்பம் பாராளுமன்றத்தில் ஏற்பட்டது. 1831-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசியல் சீர்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தது. ஜனப் பிரதிநிதிகளுக்கு இருந்த உரிமைகளை மேலும் அதி

கப்படுத்துவதே அம்மசோதாவின் நோக்கம். அஃது அதிகார வர்க்கத்தினர்க்கு மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் இருப்பதைக் குறைத்து, பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு மிகுந்த செல்வாக்கையும், அதிகாரத்தையும் உண்டாக்குவதாயிருந்தது. மெக்காலே, அத்தகைய மசோதாவைத் தம் முழு மன விருப்பத்துடன் ஆதரிப்பது என்று உறுதி கொண்டார்; அதற்கேற்ப, என்றும் இல்லாத முறையில் பாராளுமன்றத்தில் இருந்த அனைவரும் வியந்து அங்காத்துக்கொண்டிருக்கும்படி அன்று தம் சொற்றிறனைக் காட்டிவிட்டார். அவர் சொற்பொழிவு ஒவ்வொருவர் உள்ளத்திலும் உணர்ச்சி ஊட்டியது. பிரசங்கிப்பதில் நாவன்மை படைத்த மெக்காலேக்கு இணையாக அக்காலத்து வேறு எவருமிலர்; அவருக்கு இணை அவரே அன்றி வேறெவரும் கூறப்படுவதற்கில்லை. அவர் சொற்பொழிவின் குறிப்பிடத்தக்க ஒரு சில பகுதிகள் வருமாறு:

"நம் நாட்டு மக்களின் இக்கால உணர்ச்சி, 'பூரண விடுதலை பெறுதல்' என்பதைத் தவிர்த்து வேறில்லை; இஃது ஐயமறத் தெளிந்ததோர் உண்மை. நோக்கும் திக்கு எல்லாம் விடுதலை முழக்கமே ஒலிக்கின்

றது. நாட்டு மக்கள் தத்தம் உரிமையை உணர்ந்துகொண்டனர்; அவ்வுரிமையைப் பெறுவது தங்கள் இன்றியமையாக் கடன் எனவும் அறிந்து கொண்டனர். அறியாமை இன்னும் அவர்களை ஆட்கொண்டில்லை; விழிப்பு நிலை வந்து விட்டது. மக்களிடைப் பரவியுள்ள இவ்விடுதலை உணர்ச்சியைப் பாராளுமன்றம் உணர்ந்து, அவர்கள் திருப்தியுறும் வண்ணம் சட்டங்களைச் செப்பம் செய்ய முயலுதல் வேண்டும். அதை விடுத்து, மக்களுடைய மனப்பான்மையை மதிக்காமல், அவர்களுடைய விடுதலை உணர்ச்சியை அசட்டை செய்து, சீர்திருத்த மசோதாவை இம்மன்றம் நிராகரிக்குமாயின், சட்ட வரம்பிகந்த புரட்சிகளும் கலகங்களும் தோன்றுதற்கு இடங்கொடுத்ததாகிவிடும். அந்நெருக்கடியான நிலைமைக்கு அரசாங்கம் தயாராயிருக்கிறதா?

"பழைய நிகழ்ச்சிகளை உணர்ந்தேனும் நாம் எச்சரிக்கை அடைதல் நலம். அயர்லாந்தைப் பாருங்கள்! முன்னர் அயர்லாந்து குறித்துப் பாராளுமன்றம் இழைத்துவிட்ட வருந்தத்தக்க தவற்றால் அங்கு விபரீதமான—பயங்கரமான—கொடிய பலன்கள் ஏற்பட்டதை இம்மன்ற அங்கத்தினர்கள் இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள். அந்நாட்டில்

தோன்றிய விடுதலை உணர்ச்சி அங்கீகரிக்கப் படாமல் அசட்டை செய்யப்படவே, அந்நாட்டு மக்கள் புரட்சியில் இறங்கினர்; சட்டங்களை மீறினர்; சக்தி மிகுந்த சங்கங்கள் தோற்று வித்தனர்; மன்னரையும், மன்றத்தையும் மதிக்காமல் மறியல் செய்தனர்; புரட்சிக் காரர்களும் கலகக்காரர்களும் ஐரிஷ் மக்களை ஆட்சி புரியத் தொடங்கினர். வேறு மொழி களில் கூறவேண்டுமானல் ஐரிஷ் மக்களைத் தங்கள் குடிமக்களாக அங்கீகரிக்க விரும்பாத பாராளுமன்றம், அவர்களைக் கலகக்காரர்களா கவும், புரட்சியினராகவும் சந்திக்க நேர்ந்தது.

“இம்மட்டோ! ஐரோப்பிய நிகழ்ச்சிகள் இன்னும் மிகப் பயங்கரமாக நம்மை எச்சரித் துக்கொண்டிருக்கின்றன. ஐரோப்பா வெங் கும் அராஜரிகமும் புரட்சியும்தாம் ஆட்சிபுரி கின்றன. பழங்காலக் கொள்கைகளும் சட்டங் களும் அழிக்கப்பட்டு வருகின்றன. ஐரோப்பா என்னும் மலையினது பெருமையாகிய ‘சிகரம்’ தகர்க்கப்பட்ட ஒலி, இன்னும் இங்கிலீஷ் காரர்களின் செவிகளை விட்டு நீங்கவில்லை. நாடு கடத்தப்பட்ட மன்னர்களுக்கும் இளவர சர்களுக்கும் பிரிட்டிஷ் இராஜ்யத்தில் இடம் கொடுக்கப்பட்டிருப்பதை இம்மன்றத்தினர் அறியாரா?

“நற்காலமாக இங்கிலாந்து, இதுவரை புரட்சி மனப்பான்மையால் பாதிக்கப்பட வில்லை; அதனுடைய மனம் தெளிவாக இருக்கிறது; அதன் மக்கள் சட்டங்களையும் அரசாங்க நிலையங்களையும் தங்கள் மூதாதையர் மாட்டுவைத்திருக்கும் பேரன்பினைக் கொண்டு இன்றளவும் மதித்துக் கௌரவித்தே வருகின்றனர். இந்த நன்னிலை காக்கப்படல் வேண்டும். இந்நிலை வளர்ச்சி பெற வழி கோலுதல் வேண்டும். இதற்காக, உடனே அரசியல் சீர்திருத்தங்கள் செய்துவிடல் வேண்டும்; இல்லையெனின், நாடு சீர்கெடும்; அழிவுறும்; சொத்துக்கள் அனைவரிடையும் பகிரப்படும். மக்கள் வன விலங்குகளை ஒத்த நிலையில் ஆத்திரமடைந்துவிடுவர். பிரெஞ்ச் புரட்சியின் பயங்கரமான கொடுமைகள் எல்லாம் நாட்டில் நிகழத்தொடங்கிவிடும் எனவே, மன்றம் நிலைமையின் நெருக்கடியை நன்கு உணர்ந்து, அறிவும் அனுபவமும் நமக்களிக்கும் எச்சரிக்கைகளை மதித்து, சற்றும் தாமதம் செய்யாமல் சீர்திருத்தங்களைச் செய்ய முன்வர வேண்டும்.”

ஸர் தாமஸ் டென்மென், ஸர் இராபர்ட் பீல் ஆகியோர் மெக்காலேயை ஆதரித்து, அவர் பேச்சுத் திறனுக்காகப் பெரிதும் போற்றினர்.

மெக்காலே பேசி முடிக்குந் தறுவாயில், உணர்ச்சிப் பெருக்காலும், பேசிய அதிர்ச்சி யாலும் அவருடைய குரல் கம்மல் அடைந்தது. பேசி முடிந்தவுடன் மன்ற அங்கத்தினர் ஒரு வர் மெக்காலேயிடம் வந்து, "சார்லஸ் பாக்ஸின் நாவன்மை படைத்த பேச்சைக்கேட்டு நெடுங் காலம் கழித்து, இப்போதுதான் தங்கள் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தேன்" என் ரூர். இதைச் செவியேற்ற மெக்காலே, "உண்மைதான்; ஆனல், தொண்டைக் கம் மலைக் கேட்டிருக்கமாட்டீர்" என்று விகடமாக விடையிறுத்தார். மெக்காலே, மன்றத்தில் சீர்திருத்தங் குறித்துச் சொற்பொழி வாற்றிய போது, அவர் சகோதரிகள் இருவரும் மன்றத்திற்குச் சென்று அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும் அனைவரும் தங்கள் சகோ தரரை மெச்சிப் போற்றுவதையும் கண்டு, களி கூர்ந்தனர்.

மெக்காலே என்றுமே சுயநலங் கருதிய தில்லை. பிறர் இதுபற்றித் தம்மைக் குறைசொல் லக் கூடாதவாறு அவர் வாழ்க்கை நடத்தி ஞர். வாங்கிய கடன் தர இயலாதவர்களைப் பற்றிய (இன்ஸால்வெண்ட்) விசாரணை அதி காரியாக மெக்காலே உத்தியோகம் பெற்றி ருந்தார் அல்லவா? அரசாங்கம் அந்தக் கடன்

3

தர இயலாதவர்களின் சக்திக்குரிய எல்லைகளை வகுத்து ஒரு புதிய மசோதாவைக் கொணர்ந்தது. அதில் சில அம்சங்கள் தவருக இருந்தும், அவற்றைத் திருத்த முனைந்தால், தம் உத்தியோகத்துக்காகவே பரிந்து பேசுவதாகப் பிறர் எண்ணுதல் கூடும் எனக் கருதிய மெக்காலே, பேசாமல் அதை அனுமதித்துவிட்டதே அவருடைய தெளிந்த குணத்தைக் காட்டுகிறது. அந்த மசோதா நிறைவேறிய பின், அவருடைய உத்தியோகம் போய்விட்டது; அதன் மூலம் கிடைத்துவந்த வருமானமும் நின்றுவிட்டது. அதன் பின் அவருடைய குடும்பத்தில் பொருளாதாரக் கஷ்டங்கள் அதிகரித்தன.

மெக்காலே அரசியலில் பெரும் புகழ் அடையத் தொடங்கவே, அக்காலத்தில் கியாதி பெற்றிருந்த ஹாலண்டு சீமாட்டி மெக்காலேயை விருந்துக்கு அழைத்திருந்தார். வேறு பலரும் அவருக்கு விருந்திட்டனர். இங்ஙனம் மெக்காலே, பிரபுக்கள் இடையிலும் நன் மதிப்புப் பெற்ருர். அவர் சிறந்த பிரிட்டிஷ் அரசியல்வாதியாக இருந்தது போலவே, கலை உலகிலும் அலகிலாப் புகழ் படைத்து விளங்கினர்.

மெக்காலே தம் அன்னையார் உயிர் துறந்த போது இலண்டன்மா நகரில் இல்லை;

பத்திரிகைகள் மூலமே தம் அன்னையாரின் பிரிவினை உணர்ந்தார். தம்மை வட்டிலிலும் தொட்டிலிலும் மார்பின் மேலும் தோள் மேலும் கட்டிலிலும் வைத்துச் சீராட்டிப் பாராட்டி ஈ எறும்பு நெருங்காமல் வளர்த்த தம் அன்னையார் தம்மை விட்டுப் பிரிந்தார் என்ற செய்தி அறிந்ததும் அவர் உள்ளம் பதைத்தது; நெஞ்சம் திடுக்கிட்டு நெக்குருகியது; அவரால் துயரம் தாங்க முடியவில்லை; தம் தாயாரின் பிரிவை ஆற்றிக்கொள்ள அவரால் சற்றும் இயலவில்லை; தம் இல்லம் நோக்கி விரைந்து ஓடிவந்தார்; தம் அன்னையாரின் உயிரற்ற உடலைக் கண்டு, 'ஓ'வெனக் கதறிக் கதறி அழுது சாம்பினர். ஆனல் அவர், தம் சகோதர சகோதரிகளுக்கு ஆறுதல் கூறும் நோக்கத்துடன் தம் மனத்தைத் தாமே தேற்றிக்கொண்டார்; சிறுகச் சிறுகத் தம் உடன் பிறந்தார்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களை வெவ்வேறு விஷயங்களில் ஈடுபடுத்தி, அன்னையாரது பிரிவாற்றமையை மறக்கச் செய்தார்.

## 4. இந்தியாவில் புரிந்த தொண்டு

அரசியல் சீர்திருத்த மசோதா, பொது ஜனப் பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன் றத்துக் கீழ்ச் சபையில் நிறைவேறிவிட்டபின், பிரபுக்கள் மஹா சபையாகிய பாராளுமன்ற மேற்சபைக்குச் (House of Lords) சென் றது. அங்கு அது விரைவில் நிறைவேற்றப் படவில்லை. அது கீழ்ச்சபையில் நிறைவேற் றப் பட்ட பதினன்கு திங்கள் கழிந்த பின்னரே மேற்சபையால் அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமாக நிறைவேறியது. அது சட்டமாக நிறைவேற அக்கால மக்கள் சாத்விகப்போர் நடத்தினர். அதனல் அப்போழ்து பிரிட்டன் பிரதம மந் திரியாக இருந்த கிரே பிரபு தம் பதவியிலிருந்து விலகினர். அரசியல் சீர்திருத்த மசோதாவை எதிர்க்கும் நோக்கமுடைய வெல்லிங்டன் கோமகன் அப்பிரதம மந்திரி பதவி ஏற்றுச் சீர்திருத்தச் சட்டத்தை ஒழிக்க முயன்றார். ஆனல், அவர் கருத்தை ஆதரிக்க மந்திரி சபை யில் எவரும் இணங்கவில்லை; பாராளுமன்றத் தில் அவரை ஆதரித்து வாக்களிக்க ஒருவரா வது முன் வந்திலர்; தெருக்களில் அவர் கருத்தை எடுத்துக்கூற ஒரு வீரர்கூட அகப் பட்டிலர்.

இந்நிலைமையில் உண்மையான சாத்விகப் போரும் தொடங்கி விட்டது. "வாட்கள் வேண்டா; வலிய யுத்தம் வேண்டா; ஒற்றுமை, நீதி, நியாயம், நேர்மை, சட்டம், எங்கள் பிறப்பு உரிமை ஆகிய இவைகளே எங்கட்கு வேண்டும்; இறைவன் எங்கட்கு இன்னருள் கூட்டுவானாக" என்ற பேரொலி இங்கிலாந்து முழுவதும் பரவிற்று. சீர்திருத்த மசோதா சட்டமாகவில்லை எனின், வரிகொடா இயக்கம், அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் நிலங்களை எவரும் வாங்கா மறுப்பு இயக்கம் போன்றவை தோற்றுவிக்கப்பட்டு, அரசாங்கத்துடன் ஒத்துழையாமைக் கிளர்ச்சி துவக்கப்படும் என்று மந்திரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இங்ஙனம் ஒரு வாரகாலம் புரட்சி வேகம் உறுதியாயும் உயர்ந்துகொண்டும் வந்தது. மன்னர் பிரான் இதில் தலையிட்டுப் பிரபுக்களுக்கு வேண்டுகோள் அனுப்பிய பின்னரே 1832-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாம் நாளன்று அரசியல் சீர்திருத்த மசோதா பிரபுக்கள் சபையிலும் அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமாக நிறைவேறிவிட்டது.

மெக்காலே, அந்த அரசியல் சீர்திருத்தம் சட்டமாவதற்கு, எடுத்துக்கொண்ட பேருழைப்பு வீணிற் போகவில்லை. இவ்வுழைப்பின் பல

ஞக, அவர் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் சம்பந்தமுடைய அரசாங்க நிர்வாக சபையின் அமைச்சராக நியமிக்கப்பட்டார். மெக்காலே இப்பதவி பெற்றபின், இங்கிலாந்துக்கு ஏறக்குறைய ஆருயிரம் மைல்கள் தூரத்திலுள்ள இந்திய நாட்டைப் பற்றியும் இதன் குடிமக்களைப் பற்றியும், செல்வ நிலையைப் பற்றியும் நிர்வாக முறையைப் பற்றியும் ஆழ்ந்து அறியத் தொடங்கினர். அவர், இந்தியாவைப்பற்றி நல்லுணர்ச்சியும் நன்மதிப்பும், பெருமையான கருத்தும் கொண்டிருந்தார்.

மெக்காலே, பாராளுமன்றத்தில் இருமுறை 'கால்னெ' யின் பிரதிநிதியாக இருந்து, அதற்கு உரிய கால வரையறைமுடிந்த பின், லீட்ஸ் தொகுதியில் நின்று வெற்றி பெற்று, மீண்டும் பாராளுமன்ற அங்கத்தினரானர். லீட்ஸ் தொகுதியில் மெக்காலேக்குப் போட்டி பலமாக இருந்தது. போட்டித் தேர்தல் கூட்டங்கள் நடந்தன. வாக்காளருக்கு உறுதிமொழிகள் அச்சிட்ட துண்டுப் பிரசுரங்கள் ஏராளமாக விநியோகிக்கப்பட்டன. கட்சிப் பிரதி கட்சி வாதம் பிரமாதமாக இருந்தது. வாக்காளரை நேரிற் கண்டு 'ஓட்' அளிக்கும்படி அபேட்சகர்கள் கேட்டுக்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளானர்கள். முடிவில் மெக்காலே

வெற்றி பெற்றார் எனினும், இத்தகைய தேர்தல் முறையை விரும்பினாரிலர். அப்போது மெக்காலே தேர்தலைப்பற்றிய தம் கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டார் :

"உண்மையான ஜனப் பிரதிநிதித்துவ அரசாங்கத்தில் இங்ஙனம் 'ஓட்' (வாக்கு) பிச்சை எடுப்பது கேவலமானது; இது குடி அரசு முறைக்கே பாதகமானது; நேர்விரோதமானது; 'ஓட்' என்பது முகஸ்துதிக்காக-தயைக்காக-வற்புறுத்தலுக்காகக் கொடுக்கப்படுவது அன்று. வாக்காளர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து, எவரைத் தம் பிரதிநிதியாய்த் தேர்ந்தெடுத்து அனுப்பலாம் என்பதைச் சிந்தித்து, தகுதியான யோக்கியதை வாய்ந்தவர்களுக்கே 'ஓட்' கொடுத்துத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தல் வேண்டும். ஜனங்களின் பிரதிநிதியாக நிற்க முன் வருபவர் அதற்குத் தக்க யோக்கியதையும் திறமையும் உடையவரா என்பதை முதலில் வாக்காளர்கள் கவனித்தல் வேண்டும் ; ஜனப் பிரதிநிதியாய் நிற்கும் அபேட்சகருக்குக் கல்வியறிவு மட்டும் போதாது ; பிறர் உணருமாறு பேசும் - பிரசங்கம் செய்யும் ஆற்றல் வேண்டும் ; மக்களின் குறைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டும்

நாவன்மை, மொழியழகு முதலியன இருத்தல் வேண்டும்; சுய நலம் கருதும் கயமைத்தனம் கூடாது. பிறர்க்கு இதம் பேணும் பெருமை, கடமையை ஆற்றும் பொறுப்பு முதலியன வேண்டும்; இலஞ்சம் பெறும் இழிகுணம் கூடாது; ஏழைகள்மாட்டு இரக்கம், அவர் தம் துன்பத்தை அகற்றும் தீரம், பயன் கருதாது உழைக்கும் பண்பு முதலியவை இருத்தல் வேண்டும்; கோழைத்தனம், கன்னெஞ்சு, பயன் கருதிச் செயலாற்றல் முதலியன கூடா; உண்மை பேசும் வீரம் வேண்டும்; பொய்மொழியும் பேதைமைத்தனம் கூடாது. இத்தகைய அருங்குணங்கள் அமையப்பெற்றவரே மக்கட் பிரதிநிதியாய்ப் பாராளுமன்றத்தில் அமரத் தக்க யோக்கியதை பெற்றவர் ஆவர்!

"வீடு வீடாகச் சென்று 'ஓட்' சேகரிப்பது பெருந் தவறான காரியம். பொதுமக்கள் தங்கள் பொறுப்பை-கடமையை உணர்ந்து நடந்துகொண்டால் 'ஓட்' சேகரிக்கும் வீண் வேலை ஏன்? பயனற்ற - உயரிய குண நலன் அற்ற - திறனற்ற ஒருவரை மக்கட் பிரதிநிதி என்று கூறி, அந்த மனிதருக்கு 'ஓட்' போடுமாறு போய்க் கேட்பது வாக்காளரை அவமானப்படுத்துவதாகும்.

அங்ஙனம் வாக்காளர் ஒருவர் தம் வாக்கை உபயோகமற்ற ஒருவருக்குக் கொடுப்பது எனின், பொருள் பெறல் வேண்டித் தம் வாக்கை விற்ற குற்றத்தைவிட மிகுதியாகத் தம் கடமையினின்றும் பிறழ்ந்த குற்றத்திற்கு உட்பட்டுவிடுகிறார்.

"தேர்தல் காலத்தில், பிரதிநிதிகளாக நிற்கும் அபேட்சகர்கள், தாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்க விரும்பும் வாக்காளர்களுக்கு வெளியிடும் தேர்தல் வாக்குறுதிகள் - வேலைத் திட்டங்கள் முதலியனவும் தவறான முறையே ஆகும். தக்க பிரதிநிதியை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவதாயின், தேர்தல் வாக்குறுதிகளுக்கு அவசியம் தான் யாது? மக்கள் தங்கள் பிரதிநிதியாக ஓர் அரசியல் நிபுணரைத் தேர்ந்தெடுத்து அவருடைய திறமை, நாட்டுப் பற்று, பேசுவதில் புலமை, வாய்மை நெறி, பரோபகாரப் பணி ஆகியவற்றில் நம்பிக்கை வைப்பின், பிரதிநிதியாக நிற்பவர், வாக்காளர் வீடுகளுக்கு நாள் தவறாமல் சென்று வாக்குப் பிச்சை கேட்கவும், அப்பிரதிநிதியினிடம் வாக்காளர் வாக்குறுதி கேட்கவும் அவசியம் ஏற்படாது. அத்தகைப் பிரதிநிதிகளைப் பெற்றுள்ள நாடே செழிப்புறும்."

சீர்திருத்தம் செய்யப்பட்ட அரசியல் சட்ட திட்டங்களுக்கு இணங்க 1833-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாராளுமன்றத்தின் முதற்கூட்டம் கூடிற்று. மெக்காலே அப்புதிய சீர்திருத்த மன்றத்தில் இந்தியாவைப் பற்றிப் பொறுப்புடைய அங்கத்தினராக இருந்தார். அந்த வருடந்தான், இந்தியாவை நிர்வகித்து வந்த கிழக்கு இந்தியக் கம்பெனியின் அமைப்பு முறையும் மாற்றப்பட்டது. மெக்காலேயின் சொற்றிறனும், அன்பர்—அல்லாதார் அனைவர் மாட்டும் வேறுபாடின்றி அன்பு காட்டி நடந்து கொள்ளும் பெருந் தகைமையும் அவருக்கு விரைவில் பெரும் புகழ் உண்டாக்கி விட்டன. நிர்வாகக் கழகத் (Board of Control) தலைவர் கிராண்டு என்பவர் மெக்காலேயின் புத்திக் கூர்மையையும், பேசுந் திறனையும், பணியாற்றும் பான்மையையும் பெரிதும் வியந்து பாராட்டத் தொடங்கினர்.

அந்நாட்களில் மேற்கு இந்தியத் தீவுகளில் அடிமைத்தனம் நிலவி இருந்தது. அதனை அகற்றிவிட அரசாங்கம் ஒரு சட்டம் செய்ய முயன்றது. அச்சட்டத்தில், அடிமைத் தளையிலிருந்து விடுபட்ட அடிமைகள், அவர்களை விடுவித்த முதலாளிகளிடமே பன்னிரண்டு வருட காலம் வரை ‘ பதிவு ’ செய்யப்பட்ட தொழிலாளராக

வேலை செய்தல் வேண்டும் என்று ஒரு விதி சேர்க்கப்பட்டு இருந்தது. மெக்காலே, அந்த விதியை அடியுடன் அகற்றல் வேண்டும்-அல்லது காலத்தைக் குறைத்தல் வேண்டும் என்று எண்ணினார். மெக்காலேயின் தந்தையார், தம் வாழ்நாட்கள் எல்லாம் அடிமைத் தனத்தைத் அகற்றவே பாடுபட்டவர். எனவே, பாராளுமன்றத்தில் அரசாங்கம் கொணர்ந்துள்ள சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் 'பன்னிரண்டு' வருடகாலம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளராய் உழைத்தல் வேண்டும்' என்ற கட்டாய சேவை விதியை மெக்காலே ஆதரிக்க விரும்பினாரிலர்; ஆதரித்தால் அஃது அவருடைய தந்தையார்க்கு அதிருப்தியை உண்டுபண்ணும்; அடிமைத் தளையிலிருந்து தப்பிய மக்களுக்குத் துரோகம் செய்ததும் ஆகும். அவர் அவ்விதியை ஆதரிக்கவில்லை எனின், தம் பதவியை விட்டு விலக நேரிடும். அவ்வமயம் குடும்பத்தைக் காக்கும் முழுப் பொறுப்பும் அவரையே சார்ந்திருந்தது. ஆகவே, மெக்காலே தம் நிலைமையைக்குறித்து ஆழ்ந்து சிந்தித்தார்; இறுதியில் அப்பன்னிரண்டு வருட விதியை எதிர்த்தே தீருவது என உறுதி பூண்டார். ஆயின், மந்திரிமார் அவரைத் தங்கள் மன்றத்தி

விருந்து இழந்துவிட இசையவில்லை; பன்னிரண்டு வருடம் கட்டாய சேவை புரிதல் வேண்டும் என்ற விதியைத் திருத்தி, ஏழு ஆண்டுகளாகக் குறைத்துவிட்டனர். ஆகையால், மெக்காலே தம் பதவியையும் இழக்கவில்லை; அவர் கொள்கையும் கண்ணியமாய் நிறைவேறியது. அதன்பின் 1833-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத முடிவில் 'அடிமை விலக்கு'ச் சட்டமாகி விட்டது.

இவ்வண்ணம் மெக்காலே சிறிது காலம் அரசியல் வாழ்வில் பழகியபின், தனியே செல்வம் படைத்திராத எவரும் பொது வாழ்வில் மிகுந்த பணி புரிதல் இயலாது, பெருநிலை அடைதலும் இயலாது என்பவற்றை நன்கு உணர்ந்துகொண்டார். அடிமைத் தனம் அகற்றும் மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்தில் இருந்தபோது மெக்காலேயின் வாழ்வு மிக்க வறுமையுள் மூழ்கி இருந்தது. அவர், தமக்கு வருவாய் அதிகம் கிடைக்கத் தக்க வழி ஒன்றினைத் தேட வேண்டியவர் ஆனார். அச்சமயம் இந்தியா உயர்தர மன்ற (Supreme Council) அங்கத்தினர் பதவி ஒன்று காலி ஆனது. அதன் மூலம் ஆண்டு ஒன்றிற்குப் பதினாயிரம் பவுன் சம்பளம் கிடைக்கும். மெக்காலே தம் வறிய

நிலையைக் கருதி, கடல் கடந்து இந்தியா சென்று அப்பதவி ஏற்றுத் தொண்டாற்ற விழைந்தார்; அதனால் தம் நாற்பதாம் வயதுக்குள் முப்பதினாயிரம் பவுன் திரட்டிவிடல் கூடும் என்றும், அதன் பின் அரசியலில் தடையின்றிக் கலந்து உழைக்க முடியும் என்றும் கருதினார். மேலும் அவர், இந்தியாவில் அப்பதவி ஏற்கவில்லை எனின், தம் தந்தையார் முதிய வயதில் உறவினரின் உதவியை எதிர் நோக்கல் வேண்டும்; தம்பியர் தக்க கல்வி பெறுதல் முடியாமற் போய்விடும்; தம் ஆருயிரன்ன தங்கையரோ எங்கேனும் சென்று தாதிகளாக அமர்ந்து வயிறு வளர்த்தல் வேண்டும். மெக்காலே இவற்றினைக் கருத்திற் கொண்டே இந்தியாவில் பதவி ஏற்க முனைந்தார். அதற்கேற்ப, கிழக்கு இந்தியக் கம்பெனி நிர்வாகத்தினர் அவரைக் கல்கத்தா உயர்தர மன்ற அங்கத்தினராய்த் தேர்ந்தெடுத்தனர். இது நடந்த பின் மெக்காலே, இந்தியாவின் நிலை, சீதோஷ்ண அளவு, மக்கள் குணம், வாழ்க்கை முறை ஆகியவற்றைப் எல்லாம் அறிந்துகொள்ள முயன்றார்; வங்காளத்தில் தலைமை வழக்கறிஞராய் (Advocate General) இருந்து இந்தியாவைப்பற்றிய அனுபவம் மிக்காராய்

இலண்டனில் வந்திருந்த போபஸ் ஸ்மித் என்பவரிடம் சென்று பலவாறு விசாரித்தார். போபஸ் ஸ்மித் இந்தியாவைக் குறித்துப் பெருமையாகவே மெக்காலேயினிடம் கூறினர்; ஆண்டு ஒன்றிற்கு நான்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு ஆகாது என்றும் விளக்கிக் காட்டினர்.

மெக்காலே, தாம் இந்தியாவுக்குப் புறப்படும்போது, தம்முடன் வருமாறு தம் சகோதரி ஹன்னுவைக் கேட்டுக்கொண்டார்; தமக்கு அப்பதவி கிடைக்கப் பேருதவி புரிந்த இலான்ஸ்டௌன் பிரபுவுக்கு ஒரு கடிதமூலம் தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்; 'எடின்பர்க் ரெவ்யூ' பத்திரிகையின் ஆசிரியருக்கும் தம் வந்தனத்தைத் தெரிவித்து, ஆறு வருடகாலம் தாம் இங்கிலாந்தை விட்டுப் பிரிந்திருக்க நேருவதைக் குறிப்பிட்டிருந்தார். மெக்காலேயின் பிரிவு 'எடின்பர்க் ரெவ்யூ' ஆசிரியருக்கே அதிக வருத்தம் தருவதாய் இருந்தது. மெக்காலேயின் கட்டுரை வெளியாகவில்லை எனின், பத்திரிகையின் விற்பனையே குறைந்துவிடும் என்று கருதி, மிக்க புகழ் பெற்றிருந்த மெக்காலேயின் கட்டுரைகளை அடிக்கடி வாங்கிப் பிரசுரம் செய்துகொண்டிருந்த அப்பத்திரிகை ஆசிரியர்,

ஆறு வருடகாலம் வரை மெக்காலேயின் கட்டுரைகள் இன்றித் தம் பத்திரிகையை நடத்துவது எனின், வருந்தாமல் இருக்கக்கூடுமோ?

மெக்காலே 1834-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாம் நாளன்று, நீண்ட கடற் பிரயாணத்திற்குப் பின் சென்னை வந்து சேர்ந்தார். அவ்வமயம், இந்தியக் கவர்னர் ஜெனரல் வில்லியம் பேண்டிங்க் பிரபு உடல் நலம் இன்றி நீலகிரிக்கு வந்திருந்தார். மெக்காலே ஒரு வாரம் கழிந்தபின் பல்லக்கு மூலம் சென்னையை விட்டுப் புறப்பட்டு ஆற்காடு சேர்ந்து, ஆங்கிருந்து 20-ஆந் தேதி காலை பெங்களூர் அடைந்தார். அவ்வூரில் தங்கிய மூன்று நாட்களுள், அவர் சீரங்கப் பட்டணம் சென்று அதைப் பார்வையிட்டார். அவர், இளமையில் சீரங்கப் பட்டணத்தைப் பற்றிய சரித்திர சம்பவங்கள் அனைத்தும் படித்திருந்தார். அவரது மாமனை 'காலின்' என்பவர் அவ்வூரிற்றூன் நான்கு வருடகாலம் சிறையிலிருந்து, முற்றுகையின் போது விடுதலை பெற்றனர். ஆதலின் மெக்காலே அவ்வூரைப் பார்க்கப் பேரவாக் கொண்டார்; அதனுடன் சிம்மாதனம் துறந்திருந்த மைசூர் அரசரையும் கண்டார்; அவருடைய அரண்மனை, மரச் சாமான்கள், நகைகள், படை வீரர்கள், யானைகள்

போன்றவற்றைப் பார்த்துவிட்டுத் தம் சகோதரி மார்கரெட்டுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவற்றைப் பற்றி விரிவாக எழுதியிருந்தார். பிறகு, மெக்காலே பெங்களூரை விட்டுப் புறப்பட்டு, உதகமண்டலம் சென்றார். கவர்னர்—ஜெனரல் மெக்காலேயை அன்புடன் நல்வரவேற்றார். அவர் அங்குச் சிறிது நாள் தங்கிய பின், மீண்டும் சென்னை வந்து, செப்டம்பர் 16-ஆந்தேதி கப்பலேறிக் கல்கத்தாவை நோக்கிப் பிரயாணமானார்.

மெக்காலே லண்டனை விட்டுப் புறப்பட்ட பின் கப்பல் பிரயாணத்தில் ஏராளமான நூல்களைப் படித்தார். அவர் ஆங்கிலமே போல, லத்தீன், கிரீக், ஸ்பானிஷ், பிரெஞ்ச் மொழிகளும் அறிந்திருந்தார்; சென்னையிலிருந்து கல்கத்தா நோக்கிப் போகையில் போர்ச்சுகீஸிய மொழியையும் பயின்று கொண்டார்; அதற்குள், அம்மொழியில் எழுதப்பட்டிருந்த கற்பனைக் கதை உள்ள நூல் ஒன்றைப் படிக்கும் திறமையும் பெற்றுவிட்டார். ஊக்கமும் உறுதியும் உடைய மக்கள் அடையப் பெறாததும் உண்டோ?

"உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று"

என்றார் வள்ளுவரும்.

ஒரு வாரம் கடலிலும் இரண்டு நாள் 'ஹூக்ளி' ஆற்றிலுமாகப் பிரயாணம் செய்து கல்கத்தாவினை அடைந்த மெக்காலே, அரசாங்க மாளிகையில் ஆறு வாரங்கள் தங்கி இருந்த பின், அவர் விருப்பப்படி அவருக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாளிகைக்குச் சென்றார். அவர் சகோதரி 'ஹன்னா' முதலிலேயே சென்னையில் இறங்காமல் நேரே கல்கத்தாவுக்குச் சென்று, அரசாங்க மாளிகையில் தங்கியிருந்தார். பிறகு, மெக்காலே உதகமண்டலத்தில் கவர்னர் - ஜெனரலைச் சந்தித்துவிட்டு, கல்கத்தாவை அடைந்த போது, தம் சகோதரியைச் சந்தித்துத் தம் மாளிகைக்கு அழைத்துக்கொண்டார்; அதன் பிறகு தம் சகோதரி ஹன்னாவை டில்லியில் முக்கியமான ஒரு நிர்வாக பதவியில் இருந்த ட்ரேவெல்யன் என்பாருக்குத் திருமணம் செய்து வைத்தார். ஆனால் அந்தச் சமயத்தில் மெக்காலேயின் மற்றோர் அருமைத் தங்கையாகிய மார்கரெட் இலண்டனில் உயிர் துறந்தாள். இத்துயரச்செய்தி மெக்காலேக்கு உண்டாக்கின மனச் சோர்வினை அளவிட்டு உரைக்க ஒண்ணாது.

ஹன்னாவின் கணவராகிய ட்ரெவெல்யனைப் பற்றி மெக்காலே மேன்மையான கருத்துக்கொண்டிருந்தார். ட்ரெவெல்யன்

இங்கிலாந்தின் பழம்பெரும் குடும்பங்களுள் ஒன்றினைச்சேர்ந்தவர்; தம் இருபதாம் வயதில் இந்தியா வந்தவர். திருமணத்தின்போது அவருக்கு வயது இருபத்தெட்டாகும். நிர்வாகத் திறமையும் கலை நுணுக்கமும் கூர்ந்த அறிவும் வர்த்தக தந்திரமும் அவரிடம் பொருந்தி இருந்தன. அவருக்கு மேலதிகாரியாய் இருந்த ஒருவர் சுதேச மக்களிடமிருந்து இலஞ்சம் முதலியன வாங்கித் தம் அதிகாரத்தைத் துர்விநியோகப்படுத்தி வந்ததை ட்ரெவெல்யன் எடுத்துக்காட்டத் தொடங்கினர். அம்மேலதிகாரி ட்ரெவெல்யனைத் தம் தவரான பாதையில் ஈர்க்க மிக முயன்றும் பலன் அடைந்தாரிலர். அதன் பின், ட்ரெவெல்யன் தம் மேலதிகாரிமீது சாட்டிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, அவர் நீக்கப்பட்டார். அது முதல் ட்ரெவெல்யனுக்கு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நற்பெயரும் புகழும் ஏற்பட்டன. கவர்னர்-ஜெனரலும் அவரிடம் பேரன்பு பூண்டிருந்தார். நாளடைவில் ட்ரெவெல்யன் தமது நிருவாகத்தில் பல திருத்தங்கள் புரிந்தார்; இந்திய மக்கள் இடையே கல்வியைப் பரப்ப வித்தூன்றியவர் அவரே ஆவர். அவர் நல்ல உடற்கட்டு அமைந்தவர்; குதிரைச் சவாரியிலும் வேட்டை ஆடுவதிலும் விருப்பமுள்ளவர்; அவரே தம் தங்கை ஹன்ன

வுக்குத் தக்க கணவர் என்பது மெக்காலே யின் கருத்து. அக்கருத்துக்கு அரண் செய் பவரே போல ஹன்னுவும் ட்ரெவெல்யனும் கருத்து ஒத்த காதலர்களாய், கௌரவமுள்ள தம்பதிகளாய் வாழ்வு நடத்தினர்.

மெக்காலே 1836-ஆம் ஆண்டில் இந்தியா வில் பெரும் சீர்திருத்தம் ஒன்று செய்தார். 'வெள்ளையர் ஆயினும் கறுப்பர் ஆயினும் மனி தர் மனிதரே அல்லரோ? மனிதர்களுள் உயர்வு தாழ்வு எதற்காக? நிற வேறுபாடு ஏன்?' என மெக்காலே எண்ணினர். அவர் மனத்தில் இவ்வெண்ணம் ஆழப் பதிந்தது. அக்காலத்தில் இந்தியாவில் உள்ள ஐரோப்பி யர் கல்கத்தா உயர்தர நீதிமன்றம் (Supreme Court) வரை தங்கள் வழக்குகளை விசாரணை க்கு எடுத்துச் சென்று தீர்ப்புப் பெறலாம் என்றும், இந்தியருக்கு அவ்வுரிமை இல்லை என்றும் 1813-ஆம் வருட (Charter Act) ஒப் பந்தப்படி ஒரு விதி இருந்தது. இந்தியர், கிழக் கிந்தியக் கம்பெனியால் நியமிக்கப்பட்டிருந்த நீதிபதிகள் உள்ள கீழ்த்தர நீதி மன்றங்களில் தாம் தீர்ப்புப் பெறுதல் வேண்டும் என்னும் நியதி இருந்தது. சமரச சன்மார்க்க நோக்கம் படைத்த மெக்காலேக்கு இந்த ஏற்றத் தாழ்வு சற்றும் பிடிக்கவில்லை. 'வெள்ளையருக்கு ஒரு

நீதி, கறுப்பருக்கு வேறொரு நீதியா?' என அவர் கடிந்தார்; இது பாரபட்ச முறை ஆகும் என்று எண்ணி மனம் நைந்தார்; எனவே, நீதி வழங்கும் விஷயத்தில் இவ்வேறுபாட்டை ஒழித்து, வெள்ளையரும் கறுப்பரும் சமமாகக் கருதப்படல் வேண்டியவரே என்று விதிக்கும் 'கறுப்புச் சட்டம்' (Black Act) ஒன்றைக் கொணர்ந்தார். ஐரோப்பியர் இதற்கு எளிதில் இணங்குவரா? அவர்கள் அனைவரும் ஒன்று கூடி மெக்காலேயை வன்மையாகக் கண்டித்தனர். பத்திரிகைகள் அனைத்தும் ஐரோப்பியர் வசமே இருந்தபடியால் அவை அவரைக் கேவலமாகத் தாக்கத் தொடங்கின. ஆயினும், மெக்காலே இவற்றிற்கெல்லாம் அஞ்சினரில்லை; ஒரு சில பிரிட்டிஷ் குடியேற்றக்காரர் நலனுக்காகப் பெரும்பான்மையினரான சுதேசிகள் துன்பப்படல் வேண்டும் என்பதை ஏற்றாரில்லை. தம் சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்கள் மிகச் சிலரே என்பதை அறிந்த மெக்காலே, தம் கொள்கையில் மிக்க உறுதியுடன் இருந்தார். சுயநலமும் பேராசையும் ஆணவமும் உயர்ந்த சமூகம் என்னும் திமிருமே இந்த எதிர்ப்புக்குக் காரணம் என்பதை மெக்காலே நன்றாக விளக்கித் தாம் இங்ஙனம் பாரபட்சத்துடன் கூடிய அநீதி

மிக்க நிர்வாகம் நடத்துவதை விடத் தம் பதவியை இழந்துவிடத் தயாராய் இருப்பதாக இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்க அமைச்சர்கள் அனைவருக்கும் கடிதங்கள் எழுதியிருந்தார்; வெள்ளைக்காரச் செல்வர் சிலர் கோடிக்கணக்கான இந்திய மக்கள்மீது ஏறுமாறான ஆதிக்கம் செலுத்துவதைச் சகித்திருத்தல் தம்மால் இயலாத காரியம் என்பதையும் குறிப்பிட்டிருந்தார். பிரிட்டிஷ் மந்திரி சபை இதனை நன்கு உணர்ந்து, நிலைமையின் நெருக்கடியை அறிந்து, கறுப்பர் - வெள்ளையர் என்ற வேறுபாடு இன்றி, அனைவரும் சமமாக உயர்தர நீதி மன்றம் வரை தங்கள் வழக்குகளை விசாரணைக்கு எடுத்துச் செல்லலாம் என்ற உரிமையை அளிக்கும் கறுப்புச் சட்டத்தை அங்கீகரித்துவிட்டது. அதன்பின் அது சட்டமாக நிறைவேறிவிட்டது. இதுவே மெக்காலே இந்தியாவில் செய்துவைத்த முதல் சீர்திருத்தம் ஆகும்.

மெக்காலே இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே, இந்தியருக்கு ஆங்கிலக் கல்வி போதிப்பதற்கு என்றும், இந்தியரிடை ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்கு என்றும் பத்துக் கல்வி அறிஞர்கள் அடங்கிய ஒரு ‘கலைக்குழு’ அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்பதின்

மருள் கருத்து வேற்றுமை பலமாக ஏற்பட்டு விடவே, அவர்களால் பயன்தரத்தக்க காரியம் ஒன்றும் புரிவதற்கு இயலாது போயிற்று. அவர்களுள் ஐவர், மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து, சமஸ்கிருதம், பாரசீகம், அரபி போன்ற மொழிகளைப் படிப்பித்தல் வேண்டும் என்றும் போதிய பண உதவி செய்து அம்மொழிகளில் இன்னும் புதிய நூல்கள் பலவற்றை வெளிவரச் செய்தல் வேண்டும் என்றும் வாதித்தனர். மற்றை ஐவர், உயர்தரக் கல்வி ஆங்கிலத்தில் போதிக்கப் படல் வேண்டும் என்றும், பிற கலைகள் அனைத்தும் தாய் மொழிகளில் கற்பிக்கப்படல் வேண்டும் என்றும் கருதினர். மெக்காலே, பிற் பகுதியினரின் கருத்தையே பூரணமாக ஆதரித்தார்; இந்திய மக்களை இந்திய மொழிகளை மட்டும் கொண்டு பூரணக் கலை அறிஞர்களாக ஆக்கிவிட முடியாது என்றும் ஆங்கில மொழியில் அரிய நூல்கள் பல இருப்பதால் அம் மொழி பயிலுவதன் மூலமே இந்தியர் உயர் வடைதல் கூடும் என்றும் கருதினர். உலக மொழிகளுள் ஆங்கிலம் சிறந்து விளங்குவது. மேலும், உலக மொழிகளுள் உள்ள நூல்களைக் காட்டினும் ஆங்கிலத்திலேயே அரிய நூல்கள் பல எழுதப்பட்டிருக்கின்றன. அரசாங்க

மொழியாகவும் அஃது அமைந்திருக்கின்றது. மெக்காலே இக்காரணங்களை எடுத்துக்காட்டி இந்தியர்களுக்கு ஆங்கிலப் படிப்பு அவசியம் என்பதை உறுதிப்படுத்திவிட்டார்.

1835-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இந்தியக் கவர்னர் - ஜெனரல் வில்லியம் பெண்டிங்க் பிரபு 'இந்திய மக்கள் ஆங்கிலம் படித்தல் வேண்டும்' என்று ஓர் அறிக்கை வெளியிட்டு, அதற்கென ஒரு 'கமிட்டி' ஏற்படுத்தினார். மெக்காலே அதன் தலைவராக அமர்ந்தார்; தம் முழு முயற்சியுடனும் ஊக்கத்துடனும் இந்தியாவில் ஆங்கில மொழியைப் பரப்பத் திட்டமிட்டார். இருபது வருட காலத்திற்குள் இந்தியர்களே ஆங்கில மொழியில் அறிஞர்களாகி, தங்கள் தாய் மொழிகளுடன் ஆங்கிலத்தைச் சிறப்பாகப் பரப்பி வருவர் என்று அன்று மெக்காலே கூறியது பிற்காலத்தில் உண்மையாகிவிட்டது.

மெக்காலே, 'சட்டம் இயற்றும் குழு'வின் தலைவராக இருந்து, இந்தியாவில் 'குற்றச் சட்டம்' (Criminal Code) இயற்றினார். அச்சட்டம் இன்றும் இந்திய அறிஞர் அனைவராலும் பாராட்டப்படுகின்றது. "உலகம் முழுவதிலும் இக்குற்றச் சட்டத்தைப் போன்ற ஓர் உயர்தரச் சட்டம்

காணக் கிடைப்பது அரிது" என்று இந்திய நீதிபதிகள் பலர் இன்றும் பாராட்டுதல் கண்கூடு. மெக்காலே, இந்தியாவுக்கு வந்திருந்த சிறிது காலத்திற்குள் இந்நாட்டுக்காக அதியற்புதமான சீர்திருத்தங்கள் அனைத்தும் செய்தார். இறுதியில் அவர் இந்தியாவில் வகித்துவந்த தம் பதவிகளை எல்லாம் துறந்து, தம் சகோதரியுடனும் மைத்துனருடனும் இந்தியாவை விட்டு 1838-ஆம் வருட ஆரம்பத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டனர். இந்தியாவில் அவர் செய்த அரும்பணிகளுக்காக இந்திய மக்களும் அதிகாரிகளும் அவரை அன்புடன் வழி அனுப்பினர். மெக்காலே எல்லோருக்கும் தம் நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டுவிட்டார்.

# 5. அமைச்சர் தொழில்

இந்தியாவைவிட்டுப் புறப்பட்ட மெக்காலேயும் ஹன்னு தம்பதிகளும் இலண்டன் போய்ச் சேர ஆறு மாதங்கள் ஆயின. இக்காலம்போல் அக்காலத்தில் போக வர வசதி இல்லை. அவர்கள் இலண்டன் அடைவதற்குள் மெக்காலேயின் தந்தையார் ஜெகாரி மெக்காலே காலஞ்சென்றார். அவருடைய அரை உருவச்சிலை ஒன்று 'வெஸ்ட் மின்ஸ்டர் அப்பே'யில் வைக்கப்பட்டிருந்தது. மெக்காலே அக்டோபர் மாதம் இத்தாலியில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காகப் புறப்பட்டார். "இயற்கை எழிலைப் புறக்கண்களால் கண்டு களித்தல் என்பது இயலாக் காரியம்; அதனை அகக்கண்களால் நோக்கி, அதனுடன் இயைந்து வாழ்வதுதான் அழகை அறியும் சரியான முறையாகும்" என்பது மெக்காலேயின் கருத்து. அவர், அதற்காக இயற்கை வனப்பு மிகுந்த இடங்களில் தங்கி, அதை அனுபவிக்கும் பெரு நோக்குடன் இத்தாலியில் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டார்; உரோமாபுரியைக் கண்டார்; நேபிள்ஸ் நகரைச் சுற்றினார். அவ்விரு நகரங்கள் குறித்து அவருக்கு ஒரு விசித்திரமான

எண்ணம் உதித்தது; ஞாயிற்றுக்கும் திங்களுக்கும் உள்ள வேறுபாடு அவ்விரு நகரங்களுக்கிடை இருந்ததாகக் கருதினர்; உரோமாபுரி 'பக்தி'க்கும் நேபிள்ஸ் நகரம் 'உழைப்பு'க்கும் உறைவிடங்களாக இருந்தன. உரோமில் சமயக் கொள்கை உடையவர்கள் மலிந்திருந்தனர்; நேபிள்ஸில் உழைப்பை முக்கியமாகக் கொண்டவர்கள் மிக்கிருந்தனர். அவர், இத்தாலிய நகரங்கள் பலவற்றையும் கிராமங்களையும் பார்த்துவிட்டு 'மார்ஸேல்' என்ற பிரெஞ்ச் துறைமுக நகரம் சென்று அங்கிருந்து இலண்டனுக்குச் செல்லக் கப்பலில் ஏறினர்.

மெக்காலேக்கு அரசியல் வாழ்வில் விருப்பம் அதிகம்; பொதுமக்களுக்குத் தொண்டு புரிய அவா மிக்கிருந்தது. எனினும் கல்வித் துறையில் ஊழியம் புரிவதைவிட அரசியல் வாழ்வு அத்துணைச் சிறந்தது அன்று என்பது அவரது கருத்தாகும்

"அரசியல் வாழ்க்கை ஒருவருடைய உடற் சுகத்தை அழிக்கும்; உடற்கட்டைக்குலைக்கும்; மன அமைதிக்கு அடிக்கடி உலைவைத்துக்கொண்டேயிருக்கும்; அருமைத் தோழர்களைக் கடுமையான எதிரிகள் ஆக்கும்; உறக்கமற்ற இரவுகள், நோய் மிகுந்த தலைகள், வலியால் வாடும்

வயிறுகள் தாம் அரசியல் வாதிகளின் அருமைத் தோழர்கள். அடிக்கடி அரசியல்வாதிகள் பிறர் கண்டனங்களுக்கு உட்பட்டுத் தீர வேண்டும்; இவ்வண்ணம் அவர்கட்குத் தோன்றும் எதிர்ப்பையும் கண்டனங்களையும் சகித்துக்கொள்ள முழுப் பொறுமையும் மனத்தை அடக்கும் உறுதியும் வேண்டும்; இங்ஙனம் இருந்தும் அவர்கள், கலை ஞானங்களில் வல்லவர்களும், கவி பாடவல்ல புலவர்களும், நூல்கள் எழுதுவோரும் அடையும் புகழைப்போல், புகழ் அடைவது இல்லை. இவ்வுலகைவிட்டு மறைந்தவுடன் அரசியல் வாதிகளின் பெயர்களும் மறைந்தே போய்விடுகின்றன. ஆனால் புலவர்களோ! அவர்கள் இறந்தாலும் இவ்வுலகு மறையும் வரை அவர்கள் பெயர்கள் மறைவதில்லை; புகழ் குன்றுவதில்லை; கீர்த்தி பெருகிக்கொண்டே யிருக்கிறது" என்று மெக்காலே வாதம் புரிந்து, நூலெழுதும் புலவர் வாழ்வையே சிறப்பித்துக் கூறியிருப்பதிலிருந்து அவர், அரசியல் வாழ்வைவிட நூல் ஆசிரியர் தொழிலையே பெரிதும் விரும்பினர் என்பது மலையிலக்காம். பெரிய அரசியல் வாதிகள் அடைந்த புகழ், நூலாசிரியர் புகழ்முன் 'பரிதி முன் பட்ட பனி' போன்றது என்பது அவ்வறிஞர் கருத்தாகும்.

ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில மஹா கவிஞருடைய—ஹோமர் என்ற மாபெரும் புலவருடைய கீர்த்திக்கு முன் ஸீஸர்,அலெக்ஸாண்டர் போன்ற மணிமுடிதரித்த மன்னர் பெற்ற வெற்றிகளும் புரிந்த வீரச்செயல்களும் நிற்க மாட்டாமல் தலை குனிய வேண்டியவைகளே என்பதும் அப்பேரறிஞர் கருத்து. இதனால் அவர் அரசியலைவிட ஆசிரியத் தொழிலையே பெரிதும் விரும்பினார்; விரும்பி, எண்ணற்ற நூற்களைப் படித்தார்; அரிய நூல்கள் பல எழுதுவதில் முனைந்தார்; இவ்வேலைகளுடன் அரசியலிலும் ஈடுபட்டனர்.

மெக்காலே, இத்தாலியில் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு 1839-ஆம் ஆண்டு பிப்ரவரியில் இலண்டன் திரும்பியபின், அவருக்கு எடின்பர்க் என்ற அழகிய நகரத்தில் உறவு ஏற்பட்டது. அந்நகரத்துப் பிரதிநிதி ஒருவர் 'பிரபு'பட்டம் அளிக்கப்பட்டமையால், பாராளுமன்றத்தில் 'எடின்பர்க்' நகரத்துக்கு ஏற்பட்ட பிரதிநிதி ஸ்தானம் காலியானது.

மெக்காலே, அப்போது அங்கு நடந்த தேர்தலில் மிதவாதக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்திற்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வமயம் பிரதம

அமைச்சராக இருந்தமேல்போர்ன் பிரபு மெக்கா லேக்கு யுத்த அமைச்சர் பதவி அளித்தார். சுய முயற்சியாலும், ஊக்கத்தாலும், உழைப் பாலும் உயர்வடைந்த மெக்காலே, தம் நாற்ப தாம் வயதுக்குள் இத்துணைப் பெரும் பதவி வகிப்பதைப் பலர் விரும்பிலர்; ஏதேனும் ஒரு காரணம் கூறி. அவரைப்பற்றிப் பல ஆட் சேபங்களைக் கிளப்பிக் கொண்டே இருந்தனர். பிரபு குலத்தில் உதிக்காதவரான ஏழை மெக் காலே பெரும் பதவி அளிக்கப் பெற்றதை விரும்பாமல் பத்திரிகைகள் அனைத்தும் அவரைக் குறித்து நெடுநாள்வரை குறைகள் பல கூறிக்கொண்டே இருந்தன. மெக்காலே மிக்க உறுதி வாய்ந்த நெஞ்சினர். ஆதலால், பத்திரிகைகளின் கூப்பாடுகட்குச் செவி சாய்த்திலர். அவர்தம் நல் வாழ்க்கைக்கும் உயர்வுக்கும் மகிழ்ச்சிக்கும் தம் மனமும் நடத் தையுமே காரணம் என்ற கருத்துக் கொண்ட வர். மன நலமுடையவரே எல்லா நலன் களையும் அடைகிறார்; பொருளுடையவர் தம்மை உயர்ந்தவர் எனக் கருதி, தம்மை மறந்து தருக்கி நிற்பது, பொருள் இல்லார் ஏமாந்து கிடத்தலினால் தான் என்பது அவரது எண்ணம். அவர், தம் மனம் உண்மை எனக் கருதும் விஷயத்தையே எப்பொழுதும் செய்

பவர். அதுபற்றிப் பிறர் யாது கருதிய போதி னும் கவலையுறாமல் தம் காரியம் நிறைவேறு வதில் தாம் முழுத் திருப்தி அடைவார். பிறர் புகழ்தலையோ, இகழ்தலையோ எதிர்நோக்கும் குணம் அவரிடம் இல்லை. அவர் தாம் யுத்த அமைச்சராக இருப்பதற்கு உரிய எல்லாவித யோக்கியதைகளும் பெற்றிருப்பதாக எண்ணி னர்; அதனால் அப்பதவியைத் திறம்பட வகி த்து வேலை பார்த்துவந்தனர்; இத்துணை ஊழி யங்கட்கிடையே உரோமாபுரியைப் பற்றி ஒரு கவி புனைந்து, 1842-ஆம் ஆண்டில் வெளி யிட்டார்.

மெக்காலே யுத்த அமைச்சராய் இருந்த சமயம் வரவு செலவுக் கணக்கு விவாதத்தின் போது, ஒரு விசித்திர நிலை ஏற்பட்டது. அன் னிய நாட்டுச் சர்க்கரையின்மீது சுங்க வரியைக் குறைக்க அரசாங்கத்தால் ஒரு திட்டம் போ டப்பட்டிருந்தது. அஃது ஆங்கிலக் குடியேற்ற நாடுகளில் தொழிலாளர்க்கு இருந்த உரிமை யைப் பறிப்பதாக இருந்தது. அதில் மிதவாதக் கட்சியைத் திருப்திப்படுத்த ஒரு திருத்தமும் செய்யப்பட்டது. கிளாட்ஸ்டன் அது பற்றிப் பேசுகையில், அடிமைத் தனத்தை விலக்க ஜெகாரி மெக்காலே புரிந்த அருந்தொண்டு களைக் குறிப்பிட்டு, அத்தகையாரின் குமார

ராகிய மெக்காலே இப்போழ்து தொழிலாளர் உரிமையைப் பறிக்கவல்ல திட்டம் போடும் 'கன்ஸர்வேட்டிவ்' - பழைய கொள்கைகளைப் பாதுகாக்கும் - நோக்கமுடைய கட்சியைச் சேர்ந்த மந்திரி சபையில் கலந்திருப்பது பற்றி வருந்தினர்; தமக்கு இது பேராச்சரியமாய் இருக்கிறது என்றும் கூறினர். எனினும், இத்தகைய திட்டம் வகுத்த 'கன்ஸர்வேட்டிவ்' மந்திரி சபையில் பிரதிநிதிகளுக்கு நம்பிக்கை குறைந்தது. மூன்று வாரங்களுள் பாராளு மன்றம் கலைந்தது; அமைச்சர்கள், அன்னிய நாட்டுக் கோதுமை மீது வரி விதிப்பதனைப் பற்றி நாட்டு மக்கள் கருத்தறிய பொதுத் தேர்தல் நடத்தினர். இத்தேர்தலில் மிதவாதக் கட்சிக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டது. எனினும், 'எடின்பர்க்' தொகுதியில் மிதவாதக் கட்சி அபேட்சகராய் நின்ற மெக்காலே மட்டும் மீண்டும் வெற்றி பெற்றார்.

இதற்குப் பின், எடின்பர்கில் மெக்காலேக்கு இருந்த ஆதரவு குறையத் தொடங்கிற்று. பாராளுமன்றத்திலும் சமூகத்திலும் கல்வி உலகிலும், அரசியல் உலகிலும், மெக்காலேக்குச் சிறந்த புகழ் இருக்க, எடின்பர்க் நகரில் மட்டும் 1847-ஆம் ஆண்டில் அவருக்கு ஆதரவு இல்லாமற் போய்விட்டது. அவருக்

குத் தேர்தல் காலத்தில் ஏற்பட்ட பணச் செலவாலும் வருமானக் குறைவாலும் அவர் மிக்க இடுக்கண்களுக்கு உள்ளாதல் வேண்டி இருந்தது. இங்கிலேயில் குதிரைப் பந்தயப் பரிசு ஒன்றுக்காக மெக்காலேயிடம் எடின்பர்க் நகர மக்கள் சிறு தொகை நன்கொடையாகக் கேட்டனர். உடனே மெக்காலே, எடின்பர்க் வாசிகள் இங்ஙனம் பணத்தைப் பாழாக்கக் கூடாது என்றும் இவ்வாருன காரியங்களுக் கெல்லாம் பண உதவி செய்யத் தம்மால் இயலாது என்றும் இவற்றிற்கெல்லாம் பணம் கொடுப்பதனைக் காட்டிலும் தம் அங்கத்தினர் பதவியையே விலக்கிக் கொள்ளத் தாம் தயாராய் இருப்பதாகவும் கூறினர். மேலும், மதுபானங்களுக்கு விதிக்கும் வரிகளைக் குறைத்தல் வேண்டும் என்று ஸ்காட்லந்து மது காய்ச்சுவோர் பிரதிநிதிகள் மெக்காலேயிடம் தூது சென்று கூறினர்கள். அதற்கு அவர், அடியுடன் மறுத்து விட்டதோடு, அது பற்றித் தாம் ஒன்றும் நலன் புரிய முடியாது என்பதாகவும். ஆனல் அதற்கு எதிராகவே இருக்கப் போவதாகவும் தூது வந்தவர்களுக்கு விளக்கிக் கூறிவிட்டார். எடின்பர்கில் மது உற்பத்தியாளர் பலராவர். எனவே மெக்காலே மீண்டும் அத்தொகுதியில் தேர்தலுக்கு நின்ற

போது அவர்களது எதிர்ப் பிரசாரத்தால் தோல்வியுற்ருர். ஆனல் மெக்காலே, தமக்கு அத்தோல்வி அரசியல் வாழ்வை விட்டு விலகும்படி எச்சரிக்கவே நேர்ந்தது என்றும், இனித் தம் நூல் எழுதும் வேலை இடையீடின்றி நடைபெறுதல் இயலும் என்றும், நூல்கள் பலவற்றைப் படிக்கலாம் என்றும் கருதினர்.

அதன்பின் மெக்காலேயின் தங்கை ஹன்னவும் ட்ரெவெல்யனுமாகக் கிளாபாம் பகுதிக்குக் குடி சென்றனர். மெக்காலேயும் தம் இருப்பிடத்தை அல்பானிக்கு மாற்றிக் கொண்டார். அங்குத் தான் அவர் 1685-ஆம் ஆண்டு முதற் கொண்டு பிரெஞ்சுப் புரட்சிவரையில் ஓர் அரிய சரித்திரம் எழுதத் தொடங்கினர். மற்றெவரும் எழுதாத முறையில் பிரிட்டிஷ் பாராளுமன்றப் பிரதம மந்திரிமார்களுடைய விவரங்களுடன் உயர்ந்த நடையில் அச்சரித்திரம் அமைந்திருந்தது.

மெக்காலேயின் திறமையும் சாமர்த்தியமும் அமெரிக்காவிலும் பரவின. அவர் 'எடின்பர்க் ரெவ்யூ' வில் எழுதிய கட்டுரைகள் ஒரு முறைக்கு மும்முறையாக அமெரிக்கப் பத்திரிகைகளில் பிரசுரமாயின. அவரது அரிய கட்டுரைகள் பல ஓர் அமெரிக்கரால்

தொகுக்கப்பட்டு அமெரிக்கா முழுவதும் விற்பனை செய்யப்பட்டன. இதனை 'எடின் பர்க் ரெவ்யூ" ஆசிரியர் கண்டித்தார். ஆனல், அமெரிக்கர்களை என்ன செய்வது? எனவே, மெக்காலேயின் சிறந்த கட்டுரைகளை இங்கிலாந்திலேயே தொகுத்துப் பிரசுரித்து விடுவது என முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. முதலில் மெக்காலே இதை விரும்பவில்லை. அவர், பத்திரிகைகளில் எழுதப்பட்ட கட்டுரைகளுக்கு ஆறு வாரங்களுக்குமேல் மதிப்பு இருப்பதில்லை என்றும், அவற்றை நூலாக்கினல், பொதுமக்கள் ஆதரவு இராது என்றும் கூறி மறுத்தார். இதற்குள் அமெரிக்காவில் தொகுத்துப் பதிப்பித்த மெக்காலேயின் கட்டுரைகள் கொண்ட நூல்கள் இங்கிலாந்தில் பரவத் தொடங்கின. ஆங்கிலப் பதிப்பு நிலையத்தார்கள் மெக்காலேயிடம் பெரிதும் விண்ணப்பித்துக்கொண்டதன் மீது, அவர் தம் சிறந்த கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கிக் கொடுத்தார். அது வெளியிடப்பட்ட நான்கு மாதங்களுள் விற்று முடிந்து, மறுபதிப்பு வெளியிடவேண்டி வந்தது. அம் மறுபதிப்பும் விரைவில் விற்பனையாகிவிட்டது.

இங்ஙனம் ஒருவருடைய கட்டுரைகளையோ ஒருவர் எழுதினவற்றையோ அவரைக் கேட்டு

அனுமதி பெருமல் அப்படியே பிறர் பிரசுரித்துக் கொள்வதைத் தடை செய்ய மஹோன் பிரபு ஒரு மசோதா-1842-ஆம் வருடக் காப்பிரைட் மசோதா - கொண்டு வந்தார். ஒருவர் எழுதியதை அவர் விருப்பமின்றி மற்றவர் எடுத்துப் பிரசுரித்தல் வேண்டும் எனின், எழுதியவர் இறந்த நாள்முதல் இருபத்தைந்து வருடகாலத்திற்குள் அங்ஙனம் செய்தல் கூடாது என்று அதில் விதிக்கப்பட்டிருந்தது. ஆனல், மெக்காலே அந்தக் காலவரையறையை நாற்பத்திரண்டு வருடங்களாக ஆக்கிவிட்டார். மெக்காலேயின் திருத்தப்படி அந்த மசோதா பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேறியது. அதன் பிறகு1845-ஆம் ஆண்டுவரை மெக்காலே பாராளுமன்றத்தில் அவ்வவ்வமயங்களில் சிறுசிறு சொற்பொழிவுகள் ஆற்றியதன் மூலம் தம் புகழைப் பெருக்கி வந்தார்.

1845-டிசம்பரில் மந்திரி சபையில் மறுபடியும் நெருக்கடி விளைந்து, ஜான் ரஸ்ஸல் பிரபு என்ற லிபரல் - மிதவாதக் கட்சியினர், மந்திரி சபை அமைக்கும்படி அழைக்கப்பட்டார். அவர் தானிய வரிச் சட்டத்தை நீக்கல் வேண்டும் என்ற கொள்கையினர். மெக்காலேயும் தானியவரிச் சட்டம் கூடாது என்ற

கொள்கையுடையவர். அந்தச் சட்டம் நீக்கப் படாவிடின், தாம் உடனே தம்பதவியை விட்டு விலக நேரிடும் என்று மெக்காலே கருதியிருந் தார். ஜான் ரஸ்ஸல் பிரபு மந்திரி சபையை அமைக்க முயன்றபோது, அன்னியநாட்டு மந் திரி பதவிக்காகக் கிரே பிரபுவும் பாமர்ஸ்டன் பிரபுவும் (இவர் இருமுறை பிரிட்டன் பிரதம மந்திரியாக இருந்தவர்) போட்டியிட்டதால் மந் திரி சபை அமைக்க ரஸ்ஸல் பிரபுவால் முடிய வில்லை. 1846-ல் இந்தத் தானியச் சட்டம் பிர புக்கள் சபையில் நிறைவேறிய போது, மீண் டும் மந்திரி சபை கலைக்கப்படும் நிலைக்கு உட் பட்டது. மறுபடியும் ஜான் ரஸ்ஸல் பிரபுவே மந்திரிசபை அமைக்க அழைக்கப்பட்டார். இவ்வமயம் மெக்காலேக்கு இராணுவச் சம்பள விநியோக அதிகாரி பதவி அளிக்கப்பட்டது. அவர், தம் நூலெழுதும் வேலை குறைவற நடப்பதற்கு இதுதான் தகுதியான பதவி என்று கருதினர். ஆனல், அவர் எடின்பர்க் தொகுதியில் மற்றுமொருமுறை தேர்தலில் நின்று வெற்றிபெற வேண்டியவர் ஆனர். இம்முறை அவருடன் போட்டி அபேட்சகராக நின்று தோற்றவர் பெரும் செல்வர் ஆவர்.

மெக்காலே, 1848-ஆம் ஆண்டின் இறு தியில் இங்கிலாந்து சரித்திரத்தினை எழுதத்

தொடங்கி இரண்டு பாகங்களை எழுதி முடித்தார். மெக்காலேயின் மொழி நடையும், ஆராய்ச்சியும், வருணனைகளும், அவர் எழுதியிருந்த முறையும் பலராலும் போற்றப்பட்டன. "சரித்திரம் எழுதுவதில் அவருக்கு இணை அவரே. சிறந்த எழுத்தாளர்; அவர், ஒரு வாக்கியம் எழுத இருபது நூல்களைப் படிப்பார்; ஒரு வரி வருணனை எழுத நூல்களினூடே நூறு மைல் தூரம் பிரயாணம் செய்வார்" என்று மெக்காலேயின் எழுத்துப் பெருமையையும், மொழிச் சிறப்பையும் பற்றித் தாக்கரே என்பார் கூறிப் போந்தார். மெக்காலே, இங்கிலாந்து சரித்திரத்தின் மூன்றும் பாகம் எழுதத் தொடங்குமுன் ஹாலந்து, பெல்ஜியம், ஸ்காட்லாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பதினெட்டு மாதகாலம் வரை சுற்றி, அங்கிருந்த அரசியல் சரித்திர ஏடுகளை எல்லாம் சேகரித்துப் படித்துப் பல உண்மைகளை அறிந்தார்; பின்னரே நூல் எழுதத் தொடங்கினர். மூன்றும் பாகம் எழுதி முடிய இரண்டு ஆண்டுகள் பிடித்தன. அதனைப் பிழை அறப் பரிசோதித்துப் பிரசுரிக்க ஒரு வருடக் காலம் ஆயிற்று. மெக்காலே, பழைய விஷயங்களைத் தேடி ஆராய்ந்து, பழங்காலத்து அரச குடும்பங்களு

டன் தொடர்புடைய மக்களிடமிருந்த ஏடுகளை யும், ஆங்காங்குள்ள நூல் நிலையங்களிலுள்ள புராதன ஏடுகளையும் புரட்டித் தாம் எழுதிய சரித்திரத்தை ஆதாரம் மிக்கதாக அமைத்தார். மிகுந்த ஆராய்ச்சிகள் செய்த பின் அவருடைய சுறுசுறுப்பான மூளை அவருடைய விரைவு மிக்க விரல்களுக்கு வேலை கொடுக்கத் தொடங்குமாம். முதலில் மெக்காலே, ஒரு பிரதி எழுதுவார்; அதன் பின் நாள் ஒன்றுக்கு ஆறு பக்கங்கள் விகிதம் அதிற் சேர்ப்பவைகள், விலக்குபவைகள், மொழியைத் திருத்துபவைகள் ஆகிய அனைத்தும் நடைபெறும். அவர், வாக்கியங்கள் அத்துணையும் சரியாக அமைந்தாலன்றித் திருப்தி உறுவதில்லை. எழுதிய ஒன்றை அடித்துவிட்டு மறுபடியும் எழுதுதல் வேண்டுமே என்ற சிரமத்தை அவர் கருதுவதே இல்லை; அதற்கு அஞ்சித் தம் மொழியின் நடை எழிலைக் குறைக்க அவர் ஒருநாளும் எண்ணிலர். சில சமயங்களில் ஓர் அத்தியாயம் முழுவதையுமே திருத்தி மறுமுறை எழுதுவது எனினும் அவர் அயர்வு உறாமல் மீண்டும் எழுதியே முடிப்பார். எல்லாம் சரியாக அமைந்துவிட்டது என்று திருப்தி ஏற்பட்ட பின் அவர் தாம் எழுதிய பகுதிகளைப் பிறருக்கு உரத்துப்

படித்துக் காட்டுவார். அச்சு நிலையத்திற்கு அவருடைய கையெழுத்துப் பிரதிகள் சென்று விட்ட பின்னரும், அவர் மனம் அமைதி அடைவதில்லை; ஒவ்வொரு பக்கத்திலும் வரிகள் ஒழுங்காக இருக்கின்றனவா? சுத்தமாகப் பிரசுரமாகின்றதா? என்றெல்லாம் பார்த்துக் கொள்வது அவர் வழக்கம். அவர் நூலிழை அளவுகூட ஒரு வரி கோணலாய் இருப்பதனைச் சகியார். மெக்காலேயின் உழைப்பு, இடையறு ஊக்கம் இவைதாம் அவருக்கு மங்காப் புகழை ஏற்படுத்தின. அவர் எழுதிய சரித்திரத்தின் முதற்பாகத்தில், பாராளுமன்றத்திற்கு மன்னரிடமிருந்து அதிகாரம் வரச் செய்யப்பட்ட புரட்சியை முதலாகக் கொண்டு தொடங்கி, பாராளுமன்றம் தேச மக்களுடன் முழுச் சம்பந்தம் உடையதாக இருத்தல்வேண்டும் என்ற புரட்சிவரை முடிகிறது. இரண்டாம் பாகம் அமெரிக்கரின் விடுதலைப் போரைக் கொண்டதாய் இருக்கிறது. மூன்றும்-நான்காம் பாகங்களில் இதர விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

மெக்காலே, 1841-ஆம் ஆண்டில் சரித்திரம் எழுதும் வேலையில் முனைந்தார்; 1849-ஆம் ஆண்டு இறுதியில் இரு பாகங்களை முடித்தார். அவை வெளிவந்த மூன்றே நாட்களில்

இங்கிலாந்து மக்கள் அனைவரும் அவற்றை வாங்கிப் படித்து அவற்றின் உயர்வைப் பற்றிப் பாராட்டுக் கடிதங்கள் எழுதத் தொடங்கிவிட்டனர். நாள்தோறும் உலகின் பலபகுதிகளிலிருந்தும் மெக்காலேக்குப் பாராட்டுகள் வந்த வண்ணமாகவே இருந்தன. அவர் எழுதிய சரித்திரம் மிகுந்த புகழ் பெற்றுவிட்டது. ஒரு நற்குடும்பத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் போலீஸ்காரன் ஒருவனை அடித்துவிட்டதற்காகப் பதினைந்து நாட்கள் வரை சிறைக்கு அனுப்பப்பட்டார். அவர் சிறைக்குப் போகையில், ஏராளமான நாவற் கதைகளைத் தம்முடன் எடுத்துச் சென்றார். சிறை அதிகாரிகள் விவிலிய வேதத்தையும், மெக்காலே எழுதிய சரித்திரத்தையும் தவிர இதர நூல்களை அனுமதிக்க மறுத்துவிட்டனர். இதிலிருந்து மெக்காலேயின் நூலிற்குள்ள பொது ஜன மதிப்பை நன்குணரலாம்.

மாஞ்செஸ்டருக்கருகில் உள்ள பகுதி ஒன்றில் வசித்த ஒருவர், மெக்காலே எழுதிய சரித்திரத்தை வாங்கிப் படித்துவிட்டு, தாம் எய்திய இன்பம், பணமில்லாமையால் அதை வாங்கிப் படித்து இன்புறக்கூடாத இதர ஏழை மக்களும் எய்தட்டும் என்ற கருத்துக் கொண்டு, நம் நாட்டில் 'பாரதப் பிரசங்கம்'

செய்வதுபோன்று நாடோறும் மாலைப்போதில் அவ்வேழை மக்களை - அவர்தம் வேலைகள் எல்லாம் முடிந்தபின் - தம்மைச் சூழ உட்கார வைத்துக்கொண்டு படித்துக் காட்டுவார். அங்ஙனம் கேட்டிருந்தவர்களுள் ஒருவர் எழுந்து, "ஏழைத் தொழிலாளர்களும் உணர்ந்துகொள்ளக் கூடியவாறு இத்துணை எளிய முறையில் சரித்திரம் எழுதிய மெக்காலேக்கு எங்கள் நன்றி உரியது ஆகுக" என்று கூறினர். இவை அவருடைய சரித்திரத்திற்கு மதிப்புரைகளாக எடுத்துக் காட்டப் போதுமானவை ஆகும்.

அவர், எழுதிய சரித்திரம் வெளியிடப்பட்ட பத்து நாட்களுள் மூவாயிரம் பிரதிகள் செலவழிந்துவிட்டன. மற்றும் மூவாயிரம் பிரதிகள் உடனே பிரசுரிக்கவேண்டி ஏற்பட்டது. இங்கிலாந்தில் ஸர் ஸ்காட்டின் வேவர்லிக்குப் பின் இங்ஙனம் விரைவில் விற்பனையான நூல் வேறு எதுவும் கிடையாதாம். 1846-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் மூன்றாவது பதிப்பு வெளியிடப்பட்டு அதுவும் அவ்வாண்டே விற்பனையாகி முடிந்துவிட்டது. இங்கிலாந்தில் மட்டுமின்றி, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் இந்நூலுக்கு அதிக ஆதரவும் மதிப்பும் இருந்துவந்தன.

மெக்காலே எழுதிய இங்கிலாந்து சரித்திரத்தின் மூன்ருவது, நான்காவது பாகங்கள் 1855-ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிடப்பட்டன. அவை, பிரசுரமாவதற்கு முன்னரே இருபத்தையாயிரம் பிரதிகள் கோரப்பட்டிருந்தன. இந்நூலின் முதற்பதிப்பின் மூலம் மெக்காலேக்கு இருபதிஞயிரம் பவுன்கள் கிடைத்தன. அமெரிக்காவிலும், இதர வெளிநாடுகளிலும் மெக்காலே எழுதிய சரித்திரம் ஏராளமாக விற்பனை ஆயிற்று. காலக்கிரமத்தில் அச்சரித்திரம் எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டது; 1876-ல் பாரசீக மொழியிலும் வெளிவந்தது. "மெக்காலே கல்விக்காகச் செய்த தியாகங்களும் உழைப்பும் சாதாரண வெற்றியை உண்டு பண்ணுவன அல்ல. அவர் மனித இனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாவர்; மன வலிமையின் குன்று; உறுதி மிக்க கருத்தும் திறமை மிக்க உள்ளமும், சக்தியும் படைத்தவர்" என்று ஸர் ஜேம்ஸ் கிரஹாம் என்னும் ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

மெக்காலே 1848-ம் ஆண்டு நவம்பரில் கிளாஸ்கோ - சர்வகலாசாலையின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், 1849-ல் விக்டோரியா மஹாராணியாரின் கணவராகிய ஆல்பர்ட் ராஜ குமாரர் அழைப்பின்மீது,

அரண்மனைக்கு ஏகினர். அங்கு அவருக்குச் 'சரித்திர அறிஞர்' என்ற பதவி அளிக்கப் பட்டது. ஆனல் அவர் அதனை மறுத்துவிட் டார். அவர் ஒருமுறை அயர்லாந்துக்குப் பிரயாணம் செய்துகொண் டிருக்கையில், 'சுவர்க்க நீக்கம்' என்ற மில்டனின் கவி தமக்கு ஞாபகத்தி லிருக்கிறதா என்றறிய அப்படியே ஒப்புவித்துப் பார்த்தாராம். ஒரு காற்புள்ளியும் தவறின்றித் தமக்கு ஞாப கத்தில் இருப்பதைக் குறித்து, தாமே மகிழ்ந் தனராம். மெக்காலே 1849-ஆம் ஆண்டின் இடையில் அயர்லாந்து சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு, தம் இல்லம் திரும்பி வந்த போது, தம் நூல் நிலையத்தில் தாம் வாசித்த நூல்கள் எத்தனை உள்ளன என்பதைப் பார்வையிட்டார். அவர் அதுவரை பத்தாயி ரம் நூல்களுக்குமேல் வாசித்திருந்தார். அத் துணை நூல்களும் அவரது நூல் நிலையத்தில் இருந்தன. 1850-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 9-ஆந்தேதி மெக்காலே விக்டோரியா மஹாரா ராணியாருடன் விருந்துண்டார். அவர் இதற் குப் பின் பல முறை அரண்மனை விருந்து களுக்கு அழைக்கப்பட்டார்; அரச குடும்பத் தினருடன் உட்கார்ந்து உண்வருந்தினர். ஒரு முறை விக்டோரியா மஹாராணியார் அவரு

டைய கதைகளைச் சொல்லும்படி மெக்காலே யைக் கேட்டார். அவ்வளவு தாராளமாக அவர் விக்டோரியா மஹாராணியாருடனும் இதர செல்வர்களுடனும் பழகி வந்தார் என்பது நன்கு புலனாகிறதன்றோ? அவரிடம் பேசு வதையும் விருந்து உண்பதையும் வேடிக்கை யாகக் காலங் கழிப்பதையும் கௌரவம் என்றே அரச குடும்பத்தினர் முதல் இதர பிரபுகுல மக்கள் ஈறாகக் கருதினர். "தோன் றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்னும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்காய் அமைந்த வருள் மெக்காலேயும் ஒருவர் என்னல் மிகை யாகாது.

## 6. இறுதிக்காலம்

1852-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடந்தது. அதுபோது, எடின்பர்க் வாசிகள் ஒரு பெரியாருக்குத் தாங்கள் இழைத்துவிட்ட பிழைக்குப் பரிகாரம் செய்துகொள்ளும் கருத்துடன், மெக்காலேயை அழைத்து அவரையே தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தனர். அவர் தாம் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கத் தக்கவர் என்றும், நேர்மையாளர்-பாரபட்சமற்றவர்- தயவு தாக்ஷண்யங்களை விழையாதவர் என்றும் எடின்பர்க் வாசிகளால் போற்றப்பட்டார். அவருக்கு எதிராக, 'கன்ஸர்வெட்டிவ்கள்' எவ்வளவோ முயன்றும் வெற்றி பெறக்கூடவில்லை. அவருடைய வெற்றிச் செய்தி கேட்டு நாடு முழுதும் மகிழ்ச்சிப்பெருக்கில் ஆழ்ந்துவிட்டது.

1853-ல் பாராளுமன்றத்தில் உயர்தர நீதிபதி (Master of the Rolls) அங்கம் வகிப்பது நீக்கப்பட வேண்டுமென்று ஹோதம் பிரபு ஒரு மசோதா கொணர்ந்து, இரண்டு முறை அதன் வாசிப்பை வெற்றிகரமாய் நிறைவேற்றிவிட்டு இறுதி அங்கீகரிப்பிற்காக மூன்றும் முறை கொணர்ந்தார். மெக்காலே

அதை எதிர்த்து நாற்பது நிமிஷ நேரம் கேட்பவர் உள்ளம் உருகும் வண்ணம் பேசினார். அவர் பேச்சைக் கேட்ட அங்கத்தினர்கள் மனம் குழைந்தனர். இறுதியில் ஹோதம் பிரபுவின் மசோதா மூன்றும் முறையில் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. மெக்காலேயின் சொற்பொழிவு இவ்வண்ணம அங்கத்தினர் களைத் திருப்பிவிட்டது.

அதன்பின் ஜூன் மாதக் கடைசியில் இந்திய மசோதாவின் இரண்டாம் முறை வாசிப்பு மன்றத்தின் முன் வந்தது. மெக்காலே, இந்திய ஸிவில் உத்தியோகங்களுக்கு (ஐ. ஸி. எஸ்.) பகிரங்கப் பரீக்ஷைகள் வைத்து ஆட்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஓர் அருமையான சொற்பொழிவாற்றினார். இங்ஙனம் அவர் பேசியதற்குக் காரணம், அந்த உத்தியோக நியமன அதிகாரம் கவர்னர் - ஜெனரலிடம் இருத்தல் வேண்டும் என்பது மசோதாவின் நோக்கம் ஆதலின் என்க. "கவர்னர்- ஜெனரலிடம் அந்த அதிகாரம் இருந்தால் உத்தியோக வேட்டை கேவலமாக நடைபெறும். கவர்னர்- ஜெனரல் பதவியில் இருப்பவர் தம் உறவினர்களைத் தாம் அப்பதவிகளில் வைக்க முயலல் கூடும். அவர், தம் நண்பர்கள் ஸிபார்சு செய்பவர்களுக்கே உத்தி

யோகம் கொடுக்க ஏற்படும். இதனை நிறுத்தப் பாராளுமன்றத்தாலும் முடியாது. எனவே, இந்நிலை கேவலமான ஊழல்களிலும் கொண்டு செல்லலாம். இதனால் இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் இழிவு ஏற்படும். இங்கிலாந்திலிருக்கும் மந்திரிகளிடமிருந்து ஸிபார்சுக் கடிதங்கள் பெற்றுச் செல்லும் இளைஞர்களுக்கும் கவர்னர்-ஜெனரல் உத்தியோகம் கொடுக்க நேரிடும்'' என்று மெக்காலே கூறி, கிளைவ் பிரபு காலத்திலிருந்து பிற்காலம் வரை இதற்கான சில உதாரணங்களையும் எடுத்துக்காட்டினார். அவர் போட்டித் தேர்வு வைத்து அதன் மூலம் தேர்ச்சி பெற்றவர்களையே ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களாக அனுப்பவேண்டும் என்று விளக்கினார். டெர்பீ பிரபு இதை ஆதரித்தார். எல்லன்பரோ பிரபு மட்டும் மெக்காலே கருத்தை எதிர்த்து, "பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு அனுபவம் இராது. ஆகையால் அவர்கள் பயன்படாதவர்களாக இருப்பார்கள் என்று கூறியபோது, மெக்காலே எழுந்து அவர் வாதத்தைத் தகுந்த விடைகூறி வீழ்த்திவிட்டார். போட்டிப் பரீட்சைக்கும் தேர்வுப் பரீட்சைக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுப்படுத்தி, போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி

பெறுபவர் திறமைசாலிகளாக இருப்பர் என்பதை விளக்கினார். மெக்காலேயின் கருத்து அங்கீகரிக்கப்பட்டது. 1853-ம் வருட இந்தியச் சட்டம் அனுஷ்டானத்தில் வரத் தொடங்கிய போது ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கப் போட்டிப் பரீட்சை நடத்தும் குழு ஒன்றை அமைக்கும் பொறுப்பு அனைத்தும் மெக்காலேயைச் சார்ந்தது. அவர் அக்குழுவின் தலைவராய் நியமிக்கப்பட்டார். அதன் பின் அவர், 1854-ஆம் வருடக் கோடைக்காலத்தில், தாம் எழுதி வந்த இங்கிலாந்து சரித்திரத்தின் மூன்றாம் - நான்காம் பாகங்களை வெளியிட்டார். மெக்காலே எழுதிய சரித்திரத்தின் முதலிரண்டு பாகங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் ஓரிலக்ஷத்து நாற்பதாயிரம் பிரதிகள் விற்பனையாகி இருந்தன. மூன்றாவது நான்காவது பாகங்கள் வெளியிடப்பட்ட ஆறு மாதங்களுள் பதினாயிரம் பிரதிகள் விற்றுப் போயின. ஒரே சமயத்தில் ஆறு மொழி பெயர்ப்பாளர்கள் அப்பிற் பாகங்களை ஜெர்மனியில் மொழி பெயர்த்தனர். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் பாரசீகத்திலும் பின்னிரு பாகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன.

மெக்காலே, 1856-ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் இருந்து விலகிவிட்டார். அவருக்கு

1857-ல் விக்டோரியா மஹாராணியார் ரோத்லீ பிரபு என்ற பட்டம் அளித்தார். எளிய குடும்பத்தில் பிறந்து, செல்வமற்ற வாழ்வில் சிக்கி உழன்ற தமக்குப் பிரபு-பட்டம் கிடைத்தது குறித்து அவர் மிக மகிழ்ந்தார். அவர் இப்பட்டம் பெற்ற இரண்டு ஆண்டுகள் வரை சுகமே இருந்தார். அவர் தம் இறுதி நாட்களிலுங்கூட மனம் சோர்ந்தவராய் இல்லை. நூல்களைப் படிப்பதிலேயே அவருடைய பெரும்பொழுது கழிந்தது. மெக்காலே பிரபு 1859-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இருபத்தெட்டாம்நாள் மாலை இந்நில உலகை விட்டுப் பிரிந்தார். அவரது பூத உடல் பொன்றியது; புகழ் இன்றும் நிலைத்து ஓங்குகிறது. 1860-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாம் நாள் 'வெஸ்ட்மின்ஸ்டர் அப்பே' என்ற மாதா கோவிலில் புலவர்களின்-பிரபுக்களின் சமாதிக்கு இடையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது 1800 - ஆம் வருடம் அக்டோபர் மாதம் இருபத்தைந்தாம் நாள் லீஸ்டர்ஷயர், ரோத்லீ டெம்பிள் என்ற இடத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த மெக்காலே, கலைக்குன்றாய் - அறிஞர் ஏறாய் - பிரபுக்கள் திலகமாய் வாழ்ந்து, தமது ஐம்பத்தொன்பதாம் வயதில் உயிர் நீத்தார்.

## 7. குணாதிசயங்கள்

மெக்காலே பிரபு மிக்க பெருந்தகையாளர்;குணக் குன்று; புலவர் பெருமான்; பேரறிஞர்; அவர் எளியவராக வாழ்வு தொடங்கினர்; தம் பேனா முனையைக்கொண்டு பொருள் ஈட்டினர். தமக்கு ஆகும் செலவைவிடப் பிறர்க்கு மிகுதியாகச் செலவிட்டார்; தமக்கு உறவினரல்லாத பலருக்கும் உதவி புரிந்துள்ளார். ஒரு பெண்மணி தன் கணவனுக்கு வேலை ஒன்று பார்த்து வைக்குமாறு மெக்காலேயை வேண்டியிருந்தாள். அவளுடைய கணவன் மெக்காலேயின் கொள்கைக்கு மாறுபட்டவன். அதனல் அவர் அவனுக்கு வேலை தேடிக் கொடுக்க அதிகாரிகளிடம் சிபாரிசு செய்யவில்லை. ஆயினும் அருள் கனிந்த அப்பெரியார், தாமே அப்பெண்மணிக்கு வருடந்தோறும் இருபத்தைந்து பவுன் கொடுத்து வந்தார். மற்றெருமுறை எழுத்து ஒலி ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் வறுமைத் துயரால் இடுக்கண் அடைந்து மெக்காலேயினிடம் சென்று உதவி கோரினர். அவர், அந்நிபுணருக்கு ஆறு பவுன்களைக் கொடுத்து அனுப்பி

ஞர். அவர் வேலைக்காரர்களிடம் அன்பாய் நடந்துகொண்டார்; மழையில் பூனைகளும் நாய்களும் நனைவதைக் கூடப் பார்த்துச் சகிக்கும் குணம் அவருக்கு இல்லை. அவர் செல்வந்தராய்த் திகழ்ந்த போது, வறியராய் வாடுபவர்களைத் தம் வீட்டில் மாதக் கணக்கில் வைத்து உபசரித்தார்.

மெக்காலே உயிர் துறப்பதற்கு ஆறு வருடங்களுக்குமுன், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதை நிறுத்திவிட்டார். ஆனால், 'என்ஸைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா' என்ற சர்வ விஷய சங்ரஹ நூலின் எட்டாம் ஒன்பதாம் பதிப்புகளுக்காக வேண்டி, ஆலிவர் கோல்ட்ஸ்மித், பன்யான், ஜான்ஸன், பிட் இவர்களைப் பற்றிக் கட்டுரைகள் வரைந்தளித்தார்; இதனால், இறுதிக் காலத்திலும் அவருடைய எழுதும் ஆற்றலும் மனவலிமையும் தெளிவாகப் புலனாகின்றன அல்லவா ?

மெக்காலே ஓர் அரசியல் நிபுணர்; நாவன்மை மிக்க சொற்பொழிவாளர்; இணையற்ற சரித்திராசிரியர்; எவரும் எண்ணுதற்கு முடியாத அரிய ஞாபகச்சக்தி படைத்தவர்; கவிஞர்; அஞ்சா நெஞ்சம் உடையவர்; நூல் பல கற்பதில் வல்லுநர்; நுண்ணறிவினர்; ஏழைகளுக்கு இரங்குபவர்; உயர்ந்தோரால்

ஓம்பப்பட்டவர்; சிறந்த புலவர்; தமது இல்லத்தின் ஒளியாய் மிளிர்ந்தவர்.

மெக்காலேயின் தோற்றம், வழக்கம் முதலியவைகளைப் பற்றி, பிரேட் எழுதிவைத்திருப்பதிலிருந்து சில விவரங்கள் தெரிகின்றன: மெக்காலே குட்டையாயும் கட்டமைந்த உடல் உடையவராயும் நிமிர்ந்து நடப்பவராயும் இருந்தார். அவர் உடல் அமைப்பு எழில் வாய்ந்ததாக இல்லை. சிறிய உடலில் தலைமட்டும் பெருத்திருந்தது. அவர் உடைகள் உடுத்தும் வகையிற் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை; ஆடம்பரத்தை என்றும் விரும்பிலர். அவர் எப்போதும் தம் உள் சட்டைப் பையில் ஒரு கையை நுழைத்து வைத்துக் கொண்டிருப்பார். அவரது, தோற்றத்தில் அவரது மனவலிமை, உறுதி, திறமை முதலியன புலனாகாமற் போகவில்லை. உருவத்தால் ஆவது என்ன இருக்கிறது? அவர், உடற் பயிற்சி என்பதைக் கனவிலும் நினைத்திலர். அவர் செய்த உடற் பயிற்சி உலவுவது ஒன்றே. அவர் வாயுவேகத்தில் படித்துக் கொண்டே உலவுதல் வழக்கம். தெருக்களில் நடந்து செல்லுகையிலும் ஏதேனும் நூலொன்றைப் படித்துக்கொண்டே போவது வழக்கம். அவர் படித்துக்கொண்டிருந்த காலத்து, நாள்

தோறும் சிறிது நேரமாயினும் உடற்பயிற்சி செய்துகொண்டு வந்திருந்தால், மேலும் சில ஆண்டுகள் வரை அவர் உயிரோடு இருந்திருத்தல் கூடும்; அகாலத்தில் ஐம்பத்தொன்பதாம் ஆண்டில் உயிர் துறந்திருத்தல் முடியாது. படித்தல் அவசியமே; நூலைக் கைவிடாமல் விடாமுயற்சியுடன் எந்நேரமும் படித்தல் சிறந்ததுதான். ஆனால், சுவர் இருந்தாலல்லவா சித்திரம் வரைதல் கூடும்? சுவராகிய நம் உடலை உறுதியுடன் வைத்திருக்க - பிணியிலிருந்து தப்ப நாம் நாடொறும் உடற்பயிற்சி செய்து வரல் மிகவும் இன்றியமையாதது அன்றோ?

மெக்காலே தம் நண்பர்களிடம் மிக்க அன்புடன் நடந்து வந்தார். அவர், நண்பர்களுக்கு இடுக்கண் வந்துற்றபோது, உடுக்கை இழந்தவன் கை போல அதைக் களைவதில் எத்தகைய தியாகம் செய்ய நேர்ந்தபோதினும் அதற்காகப் பின்வாங்கியதில்லை. அவருக்குத் தம் சகோதரிகளிடம் அளவற்ற அன்பு இருந்தது. அவர் அடிக்கடி அவர்களைத் தம்முடன் உலவ அழைத்துச் செல்வதுண்டு. அவர், எத்துணை நேரமாயினும் அவர்களுடன் அளவளாவிப் பேசி, அவர்கள் மனங்குளிர-திருப்தியடைய - மகிழ்வடையச் செய்வார். அச்சகோதரிமார் இருவரும் இல்லத்திலேயே நன்கு

கல்வி கற்பிக்கப்பட்டனர். அவர்களுடைய நல் வாழ்வில் மெக்காலே மிக்க கவனம் செலுத்திவந்தார். இத்துணை இளகிய குண நலம் வாய்ந்த மெக்காலே, பொது வாழ்வில் மிகவும் கண்டிப்பான நோக்கம் உடையவர்; ஒழுக்க மின்மை, இழிவான தன்மை, குறுகிய நோக்கம், சுயநலப்பான்மை முதலியவற்றை அடியோடு வெறுத்தார்; ஒழுங்காகக் கவியாக்கத் தெரியாதவர், அரை குறையாகப் படித்து நூல்கள் எழுதுவோர் ஆகியோரைக் கடிந்து வந்தார்; பாரபட்சமின்றிக் குற்றங்களை எடுத்து விளக்கிக் காட்டினர். அவர், பழைய வைதிகக் குருட்டு வாதத்தை முற்றும் வெறுத்தார். அவர், காலத்தை வீணில் கழிப்பவர்கள், தங்கள் கடமையை உணர்ந்து ஒழுங்காகப் பணி ஆற்ருத அதிகாரிகள், புறங்கூறித் திரிபவர்கள், பொய் பேசுபவர்கள், ஒழுக்கம் இல்லாதவர்கள் ஆகியோரை 'வேம்பு' என மதித்தார். அப்பெரியாரிடம் காணப்பெற்ற இவை அனைத்தும் அவருடைய உயர்ந்த ஒழுக்க நிலையையும் அருங்குணங்களையும் நிரூபிக்க வல்லவைகளாய் இருக்கின்றன அல்லவா?

மெக்காலே பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே கணிதத்தை விரும்பிலர். அவர் கலாசாலையிற் பயின்ற காலத்தும் கணிதம்

பற்றிய தம் மனப்பான்மையை நீக்கிக்கொண்டிலர். சில எண்களையும் புள்ளிகளையும் அறிந்து ஞாபகத்தில் வைத்துக்கொள்வதைத் தவிர்த்துக் கணிதம் என்பது வேறு ஒன்றும் இல்லை என்பதும், அத்தகைய ஒன்றனைக் கணித 'சாத்திரம்' என்று கூறுதல் தகாது என்பதும் அவரது கருத்தாகும்.

அவரிடம் இயற்கையின் எழிலைக் கண்டு அனுபவித்து இன்புறும் குணம் இல்லை எனினும், அவர் உதகமண்டலம் சென்றிருந்து, அதை விட்டுச் சென்னைக்குத் திரும்பிவந்த போது, இடைவழியில் இருக்கும் இயற்கை வனப்பு அவர் மனத்தைக் கவர்ந்துவிட்டது. பச்சைப் பசேல் என்றிருக்கும் மருத நிலங்கள் அவரது உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவர் தாம் ஏறிச்சென்ற பல்லக்கில் துள்ளிக் குதித்து, "இந்நாட்டின் பகுதிகள் சில ஏடன் தோட்டமோ? இவ்வியற்கைப் பசுங்காட்சியின் இடையில் - பரிதியின் பொன்னொளியில்-நடந்து செல்வதையே நான் பெரிதும் விழைகின்றேன்" என்று தம்முடன் வந்தவர்களிடம் கூறி, இந்தியாவின் இயற்கை அழகை வியந்து பாராட்டினர்.

மெக்காலே இறுதிவரை மணந்து கொண்டாரிலர்; பிரமசாரியாகவே இருந்தார். அந்

ஹனமிருந்தும் அவருக்குக் குழந்தைகள் மாட்டு மிக்க அன்பு உண்டு. அவர் தம் சகோதரி ஹன்னுவின் குழந்தைகளை அன்புடன் வளர்த்தார்; அவை மழலை மொழியாடுதல் கண்டு மனமகிழ்ந்தார்.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்பதன்றோ பொய்யா மொழிப் புலவர் பொன்னுரை!

மெக்காலே, ஹன்னுவின் மக்களுக்கு எனப் பல புதிய விளையாட்டுகளைக் கண்டு பிடித்து அவர்களுக்குக் கற்பித்தார்; சிறு சிறு நாடகங்கள் எழுதி அவர்களை நடிக்கச் செய்தார். அவருக்கு அவர்களைப் பேசப் பழக்குவதிலும், அவர்களுக்குக் கல்வி போதிப்பதிலும், அவர்களுடன் விளையாடுவதிலும் விருப்பம் அதிகம். அவர், தினம் ஒரு மணி நேரத்தை அவர்களுடன் விளையாடுவதில் கழித்துவந்தார். அவர், தமக்குக் குழந்தைகள் இல்லாதிருந்தும் பிற பிள்ளைகளிடம் மிக்க அன்பு காட்டி அவர்தம் மனத்தைக் கவர்ந்திருந்தமை போற்றத்தக்கதன்றோ?

மெக்காலேக்குப் பலமொழிகளில் புலமை பெறல் வேண்டுமென்ற அவா அதிகம். அவர் முக்கியமான ஐரோப்பிய மொழிகளிலெல்

லாம் தெளிந்த அறிவு படைத்திருந்தார். அவர் பல மொழி நூல்களைப் பயிலுகையில், ஒவ்வொன்றையும் கருத்துச் செலுத்திப் படிப்பார். கற்றதை நினைந்து நினைந்து, தாம் படித்தவைகளை அப்படியே மனத்தில் ஆழ்ந்து அனுபவிப்பவர் எவரும் எளிதில் எதனையும் மறத்தல் இயலாது. மெக்காலே இம்முறையிற் பயின்றவர். அவர், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற அத்துணை நெடிய நூல்களான சுவர்க்க நீக்கம், யாத்ரிகரின் முன்னேற்றம் போன்றவைகளைக் கால் புள்ளியும் விடாமல் அப்படியே ஒப்புவிக்கும் ஆற்றல் படைத்திருந்தார். அவர், தம் இறுதிக்காலம் வரை படிப்பதை நிறுத்தினரிலர்; எப்போழ்தும் ஏடுங் கையுமாகவே இருப்பர்; முப்பத்துனன்கு வயதில் போர்ச்சுகீஸிய மொழி பயின்று அதில் திறமை பெற்றார் என்பதிலிருந்து அவர் மன வலிமை விளங்குகிறது அன்றோ?

ஒழுக்கம், வாய்மை, வாக்குறுதி தவருமை, நேர்மை முதலியன அவரிடம் காணப்பெற்ற அருங்குணங்கள். அவர், மனிதரை மனிதர் தாழ்வாக மதிப்பதையும் நடத்துவதையும் பெரிதும் வெறுத்தார். மேற்கு இந்தியத் தீவுகளில் உள்ள சுதேசிகளை

அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தல் வேண்டும் என்று அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அளவிறந்தன; செய்த தொண்டுகள் கணக்கற்றன. பிறப்பாலும் நிறத்தாலும் பேதங் கற்பிப்பது பேதைமை என்பது அவர் கருத்து. ஞாயிறு அவர்களை நீக்கி ஒளி வீசுவதில்லை; திங்கள் அவர்களை விலக்கித் தண்ணொளி பரப்புவதில்லை. காற்ரே மழையோ கடுங்குளிரோ மற்றெந்த இயற்கையோ மனிதரில் எவரையும் ஒதுக்கிவைப்பதில்லை. மனிதனை மனிதன் ஆணவத்தாலும் மமதையாலும் ஆட்கொள்ளவும் அடிமைப்படுத்தவும் முயல்கிருன். வலிமை அடைந்த ஒருவன் வலிமை அற்றவனை அடக்கி ஆள்கிருன். பொருள் திரட்டிய ஒருவன் பொருள் இல்லாதானை இழிந்தவனுகக் கருதுகிருன். இதனுலேயே உயர்வு தாழ்வு என்னும் வேறுபாடுகள் நிகழ்கின்றன. இவற்றை நன்கறிந்த மெக்காலே, உயர்வு தாழ்வு என்னும் வேறு பாட்டினுல் உண்டாகும் தீமைகளையும் மனித இனத்திற்கே மனிதர்கள் இழைக்கும் கொடுமைகளையும் அகற்ற முயன்ருர்; அவர் அம்முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்ருர்.

அவர் இந்தியாவில் ஆற்றிய அரும் பணிகள் பல. வெள்ளையர் கறுப்பர் என்ற நிற

வேற்றுமைத் திமிரால் நீதி வழங்கலில் இருந்த பாரபட்சத்தை ஒழித்தார்; மக்கள் அனைவரும் ஆங்கிலமொழி பயிலலாம் என்று அனுமதித்தார்; மக்களுக்குக் கல்வி அறிவைப் பெருக்கவேண்டும் என்று முயன்றார்.

அவர் பிறர் விருப்புக்கும் வெறுப்புக்கும் அஞ்சாமல் தம் கருமத்திலேயே கருத்தூன்றிய மனப்பான்மை உடையவர். எடுத்த காரியத்தை அரைகுறையாய்ச் செய்யும் வழக்கம் அவரிடத்தில் இல்லை. அவர் எதனையும் தீர யோசித்தே தொடங்குவார்; தொடங்கிய பின் நன்கு சிந்தித்து, அதைத் திறம்படச் செய்து முடிப்பார்.

மெக்காலே, தாம் காணும் எந்த முக்கிய விஷயத்தையும் குறித்துவைக்கும் குணம் பெற்றிருந்தார். அவர், இந்தியாவில் இருந்த காலத்தில், இந்தியாவின் இயற்கை வளம், இந்திய மக்கள் நாகரிகம், கலைகள் ஆகியவை குறித்து இலண்டனிலிருந்த தம் நண்பர் ஒருவருக்குப் பல கடிதங்கள் எழுதியிருந்தார். அவர், தாம் புதுமை என நினைக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பூரண விவரங்களுடன் தம் குறிப்பு நூலில் குறித்து வைத்துக் கொள்வார். அவர், பிரெஞ்சு நாட்டிலும், இத்தாலியிலும் சுற்றுப்பிரயாணம் செய்தபோதும்,

அங்கங்கே கண்ட நிகழ்ச்சிகளையும் மற்றை விவரங்களையும் குறித்து வைத்தார்; தோழர்களுக்குக் கடிதங்கள் எழுதினார். அங்ஙனம் அவர் குறிப்பு எழுதிவைக்கும் குணம் பெற்றிருந்ததனால் தான் அவருடைய வாழ்க்கை வரலாறு இன்று எழுத முடிந்தது. அவர், இத்தாலியில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இங்கிலாந்து திரும்பியபோது, தம் குறிப்பு நூலின் உதவியைக் கொண்டே உரோமாபுரியைப்பற்றிய செய்யுள் நூலொன்று செய்தார்.

குறிப்பு எழுதிவைக்கும் வழக்கத்தை ஒவ்வொரு மாணவரும் மேற்கொள்ளல் வேண்டும். அஃது இன்றி அமையாத செயல் ஆகும்; ஒழுக்க வாழ்வுக்கு அரண் செய்யும்; அறிவை வளர்க்கும். குறிப்பு வைக்கும் வழக்கம் நம் நாட்டவரிடம் இராதபடியால் இன்றும் நம் நாட்டுப் பெருமக்களின் உன்னத வாழ்க்கை வரலாறுகளை நாம் படித்தறிதற்கு இயலாமல் இருக்கிறது. நம் நாட்டு அறிஞர்கள், புலவர்கள், அரசியல் ஞானிகள், அரசர்கள், கொடை வள்ளல்களாகிய பலருடைய அரிய வாழ்க்கை வரலாறுகள் நமக்கு இன்றும் சரியாகக் கிடைத்தில. அவை பொய் கலந்த கற்பனைக் கதைகளைப் பேரன்று இன்று நாம் படிக்க நேர்ந்திருப்பதற்குக் காரணம், அவர்கள் தங்

கள் வாழ்க்கையினைப்பற்றிய எத்தகைய குறிப்பும் எழுதி வைக்காதது அன்றோ? 'பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து திறந்தொறும் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப்பொருள் விளங்கச் சொல்லும் வல்லாராகிய' திருவள்ளுவருடைய சரியான வரலாறு எவருக்கேனும் ஒழுங்காகத் தெரியுமா? அவர் குலமே விவாதத்திற்கு உரியதாக இருக்கிறது. அவரை அந்தணர் என்பார் சிலர்; ஆதிக்குப் பிறந்தவர் என்பார் சிலர்; வள்ளுவ வகுப்பினர் என்பார் சிலர்; மயிலாப்பூரில் பிறந்தார் என்பார் சிலர்; இல்லை, மதுரையில் பிறந்தார் என்பார் சிலர்; சைவர் என்பார் சிலர்; சமணர் என்பார் சிலர். இவ்வாறு ஒருவரைப்பற்றிப் பலப்பல கூறுவதற்குக் காரணம், அவரைப்பற்றிய சரியான குறிப்பு ஒன்றும் கிடைக்கப் பெறாததுதான். அவருடைய திருக்குறளை இன்று உலகம் போற்றுகிறது; அது பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கிறது. எனினும் அதன் ஆசிரியருடைய உண்மையான வரலாறு நமக்குக் கிடைத்திலது. இது போலவே, சிந்தைக்கினிய—செவிக்கினிய—வாய்க்கினிய சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணி மேகலை, கம்பராமாயணம் ஆகிய அரும் பெரும் நூல்களை இயற்றிய பெரி

யார்களின் உண்மை வரலாறுகள் உங்கட்குத் தெரியுமா? இத்துணைப் புலமையும் புகழும் அடைந்திருந்த அவர்கள், தங்கள் வாழ்வு நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்திலர். அதனால், அன்றோ இன்று நமக்கு அவர்களுடைய உண்மை வரலாறுகள் கிடைக்கவில்லை! ஆனால் நம் நாட்டு அறிஞர்க்கு மாறாக மேனாட்டு அறிஞர்கள் தங்கள் வாழ்வு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டே வைத்தனர். அவர்களுள் தலையாயவர் மெக்காலே. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவர் குறிப்பிட்டு வைப்பதில் எப்போதும் தவறியதில்லை. எனவே, மாணவர் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைக் குறிப்பு, அரிய நிகழ்ச்சிகள், அதிசய சம்பவங்கள் ஆகியவற்றைக் குறிப்பு நூல்களில் குறித்து வைத்தல் வேண்டும். இவ்வழக்கம் மாணவர்களின் வாழ்வினைப் பண்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. இக்குறிப்பெழுதிவைக்கும் நற்பழக்கம் மெக்காலேயிடமிருந்தேனும் நாம் அறிந்து கொள்ளல் நலமாகும்.

## 8. அவரது பெருமை

மெக்காலே சிறந்த கலைஞானக் குன்ருய் மிளிர்ந்தது போன்று அரசியலிலும் புகழ் படைத்திருந்தார் என்பது இதுவரை அவர் வாழ்க்கை நலன்களைப் படித்தோர் உணர்வர். அவர் உடற் பயிற்சி செய்வதில் சிரத்தை கொள்ளவில்லை எனினும், அவரது ஐம்பத்திரண்டாவது வயது வரையில் அவரைப் பிணி ஒன்றும் பீடிக்கத் துணிந்திலது. அவர் உயிர் துறக்கும் வரை படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் காலங் கழித்தனர் எனினும் அவர் உடல் நலங்குன்றிப் பிணிவாய்ப்படாமலே இருந்தார். மெக்காலே மிகச் சிறு வயதிலேயே இயற்கைக்கு மீறிய அறிவு படைத்திருந்தார்; பள்ளிக்கூடத்தில் படித்த போது சுறுசுறுப்பு மிகுந்திருந்தார்; இருபத்தைந்தாம் வயதில் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதத் தொடங்கி விட்டார்; முப்பதாம் வயதில் பாராளுமன்றத்தை மயங்க வைக்கும் வன்மை மிக்க சொற்பொழிவாளர் ஆனர். நாற்பத்திரண்டாம் வயதிற்குள் அவரது மொழி நடை, இலக்கியத்திற்கு அணிகலனுக அமைந்தது; சமூகத்திலும், அரசியல் வாழ்விலும் தலைவரானர்; கலை உலகில் தலை சிறந்து விளங்கினர். அந்த வய

திற்குள் அவர் புனைந்த கவிகள், ஸ்காட்டின் கவிகளுக்கு ஏற்பட்டிருந்த பெருமையை அடைந்தன; அவர் எட்டு வருடகாலம் உழைத்து எழுதிய சரித்திரம் ஒரே வருடத்தில் அவருக்கு இருபதினாயிரம் பவுன்கள் அளிக்க வல்ல அளவு விற்பனை ஆயிற்று

அவரது பெருமையை விளக்க அச்சரித்திர நூல் விற்பனை ஒன்றையே குறித்தல் சாலும். ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய 'லே ஆப் தி லாஸ்ட் மின்ஸ்ட்ரெல்' என்ற நூல் வெளியிடப்பட்ட முதல் ஆண்டில் இரண்டாயிரத்து இரு நூற்றைம்பது பிரதிகள் செலவாயின; 'மார்ம்யன்' வெளியான முதல் மாதத்தில் இரண்டாயிரம் பிரதிகள் விற்பனை ஆயின. மெக்காலே எழுதின சரித்திரமோ வெளியான பத்தே நாட்களுள் மூவாயிரம் பிரதிகள் செலவாயின; பிறகு, சில மாதங்களுள் மற்றொரு மூவாயிரம் பிரதிகள் செலவாயின. அமெரிக்க ஐக்கிய நாட்டில் தனிப் பதிப்பாக வெளியிட்டதில் அங்கு ஓரிலக்ஷத்து நாற்பதினாயிரம் பிரதிகள் விற்பனை ஆயினவாம். இவ்வண்ணமே ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் கணக்கற்ற பிரதிகள் விற்பனையாயின. இவை போலவே, மெக்காலேயின் கட்டுரைத் தொகுதியும் மிக விரைவில் ஏழு பதிப்புகள் வெளியா

யின. அவர் எழுதிய 'புராதன ரோம நக ரக் கவிகள்' என்னும் நூல் மக்களால் இலக்ஷக் கணக்காக வாங்கி ஆதரிக்கப்பட்டது.

அவர் எழுதிய இங்கிலாந்தின் சரித்திரத்தின் மூன்றும் நான்காம் பாகங்கள் வெளிவருமுன்னரே, இருபத்தையாயிரம் பிரதிகள் வர்த்தகர்களால் அவசரமாகக் கோரப்பட்டிருந்தனவாம். அம்மட்டோ ! அவருடைய நூல்கள் எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் பாரசீக மொழியிலும் அவ்வம்மொழிப் புலவர்களால் பெயர்த்து வரையப்பட்டன. எனவே, மெக்காலேயின் நூல்கள்மாட்டு மக்கள் எத்துணை ஆர்வம் உடையவர்களாக இருந்தனர் என்பதும், அவர் நூல்கள் மக்களிடை எத்துணைப் பெருமை பெற்றிருந்தன என்பதும், நன்கு புலனாகின்றன அல்லவா ?

மெக்காலேயின் உரை நடையில் வன்மை, நேர்மை, தெளிவு, மலைவு தோன்றாமை, கருத்து மயக்கமின்மை, பொருள் திரிபின்மை, அழகு முதலியன செறிந்து மிளிர்கின்றன. மொழியில் அவருக்குத் தெளிந்த புலமை இருந்தது. பள்ளம் நோக்கிப் பாயும் வெள்ளம் போல, அவருக்குக் கருத்துக்களும், வார்த்தைகளும் தடையின்றி விரைவாக மூளையில் உதித்துக்கொண்டே இருந்தன.

மெக்காலே சொற்பொழிவு ஆற்றுவதி லும் திறன்மிக்கவர். பாராளுமன்றத்தில் அவர் 'பேசுகிருர்' எனின், ஓர் இடமும் காலியாக இராது. மெக்காலேக்குச் சாதக மாகவே இருப்பதில்லை என்ற மன உறுதி யுடன் மன்றத்திற்கு வருபவர்களின் மனத் தைக்கூட அவருடைய ஐந்து நிமிடப் பேச்சுக் கவர்ந்துவிடும் தன்மை வாய்க்கப்பெற்றது. மெக்காலே ஒரு முறை பாராளுமன்றத்தில் நாற்பத்தைந்து நிமிடம் வரை பேசினர். அவர் பேசுவதற்கு முன் அம்மன்ற அங்கத்தினர் அனைவரும் எதனை ஆதரிக்க எண்ணியிருந்த னரோ அதனையே அவர் பேசி முடித்ததும் எதிர்த்து 'ஓட்' அளித்தனர். தங்கள் மனம் அவரது பேச்சில் வசியமாகி மயங்கிவிட்டது என்று தான் அவர்களால் கூற முடிந்ததே ஒழிய மற்றக் காரணம் ஒன்றும் கூற முடிய வில்லை எனின், அவருடைய பிரசங்கவன்மை எத்தகையதாயிருந்திருக்கும் என்பதைச் சிந் தித்துப் பாருங்கள்.

மெக்காலேயினிடம், கை புனைந்து இயற் ருக் கவின் பெறு இயற்கையின் எழிலை அனுப விக்கும் தன்மை இயற்கையாகவே இல்லை; வானும், வானுற ஓங்கி நிற்கும் வரைகளும் அவருக்கு இனிமை தருவனவாக இல்லை; சிற்ப

மும் சித்திரமும் சிறந்தனவாகத்தோன்று வதில்லை; சித்தாந்த வேதாந்த ஆத்மஞான போதங்கள் என்பன அனைத்தும் அநியாய மாகக் காலங் கழிக்க வழிகோலுவன என்றே எண்ணினர். அவருடைய நோக்கம் எல்லாம்-ஆர்வம் எல்லாம் இலக்கியங்களில்தாம் ஆழப் பதிந்திருந்தன. 'இலக்கியங்கள் படிப்பதிற் றான் இன்பம் நிறைந்திருக்கிறது; அவற் றைப் படித்துப் படித்து இன்புறுதலே இனிய வாழ்வு' என அவர் எண்ணினர்.

அவர் காலத்திற்றான் இங்கிலாந்து மக் களுக்கும் இந்திய மக்களுக்கும் பல நன்மை கள் கிடைத்தன; இங்கிலாந்து மக்களுக் குப் பாராளுமன்றத்தில் மிகுந்த பிரதி நிதித்துவம் கிடைத்தது. மெக்காலேயின் அரிய அரசியல் சீர்திருத்தச் சொற்பொழி வால் தான் அவர் காலத்தில் அரசியல் சீர் திருத்தம் ஏற்பட்டது; தானிய வரிச்சட்டம் விலகியது; கத்தோலிக்க கிறித்துவர்களுக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் அகன்றன! மக்க ளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வல்ல ஸ்தல அரசாங்க நிர்வாக சபைகள் பல ஏற்படுத்தப் பட்டன; பிற வசதிகளும் உண்டாயின.

மெக்காலே எவ்விஷயத்தையும் ஒளித்துப் பேசும் வழக்கத்தினர் அல்லர். அவர் ஒரு

நாள் தம் பிரிய சகோதரியாகிய மார்கரேட்டுடன் பேசிக்கொண் டிருக்கையில், இவ்வுலகில் தம்மை விடச் சிறந்த சோம்பேறி இருக்க முடியாது என்ருர். இது மார்கரெட்டுக்கு வியப்பாக இருந்தது. அவள் தன் சகோதரர் ஏன் இங்ஙனம் கூறுகின்ருர் எனச் சிந்தித்தாள். ஏன் எனின், மெக்காலே இத்தாலிய மொழி பயின்ருர்;ஸ்பானிய மொழியில் புலமை பெற விரும்பினர் ; அதனையும் மிகச் சில நாட்களுள் முடித்து விட முயன்ருர் ; அவ்வாறு விரைவில் அம்மொழிகளைப் படித்துப் புலமை பெறலாம் என்று எண்ணியபடி முடியவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே, தாம் உலகில் முதற்றரச் சோம்பேறி எனத் தம் தங்கையிடம் கூறிக்கொண்டார். எந்தச் சிறு விஷயத்தையும் தவருமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருப்பதும், வாயுவேகமாகப் படித்தும் விஷயங்களை அப்படியே கிரகித்துக் கொள்வதும் எப்படிச் சாத்தியமாகின்றன என்று மார்கரெட் வியப்புற்றுத் தம் சகோதரரைக் கேட்டபோது, "ஆகாயக் கோட்டை கட்டுவதில் நான் வல்லவன். அதுதான் என் ஞாபகச் சக்திக்கும் கல்விக்கும் காரணமாகும். குழந்தைப் பருவத்திலிருந்தே சரித்திரங்கள் படித்ததன் மூலம் நான் ஆகாயக் கோட்டைகள்

கட்டிச் செல்வதில் இறங்கிவிட்டேன். நான் தெருக்களில் நடந்துபோகும் போதெல்லாம் கிரீஸிலிருப்பது போன்றும், ரோமாபுரியில் இருப்பது போன்றும், பிரெஞ்ச் புரட்சியில் ஈடுபட்டிருப்பது போன்றும், முப்பது வருடப்போரின் இடையில் இருப்பது போன்றும் நினைத்துக்கொள்வேன். எனவே, என் போன்ற மனிதர்களுக்கு எவ்விஷயமும், தேதி விவரங்களும் பிழையாமல் ஞாபகத்தில் இருக்குமல்லவா ?" என மெக்காலே மொழிந்தார்.

மெக்காலே, இந்தியருக்கு ஆங்கிலக்கல்வி அளிப்பதன் மூலம் அவர்களுடைய தாய் மொழிகள் வளர்ச்சி அடைதல்கூடும் என்றும், அவர்கள் முன்னேற்றம் அடைவர் என்றும் கருதினர். அதற்காக, அவர் ஊதிய மற்ற கௌரவ ஊழியராய்க் கல்விக் குழுவில் அங்கம் வகித்துத் தொண்டாற்றித் தம் கருத்தில் வெற்றியுற்றார். மேலும் சட்டம் இயற்றும் குழு ஒன்று அமைக்கப்பட்டபோது, அவர், அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்பதவிக்கும் ஊதியம் இல்லை. எனினும், அவர் உற்சாகம் மிக்கவராய், 'குற்றச்சட்டம்' (Criminal Procedure Code) ஒன்றை இயற்றினார். மிகுந்த கஷ்டமின்றிக் குற்றங்களை அடக்கும் முறைகளைக் காணவும், மிக்க பணமும் கால

மும் விரயமாகாதவாறு, விசாரணைக்கு வந்திருப்பவர்களிடமிருந்து உண்மையை உசாவி அறிந்துகொள்ளவும் அச்சட்டத்தில் வழி கோலினர். இங்ஙனம் அவர் இயற்றிய சட்ட அமைப்புப் பற்றிப் பலர் அவரைப் புகழ்ந்து போற்றிப் பாராட்டினர்.

நூல்கள் பல நுணுகிப்படித்தவருள்ளும் மெக்காலே முன்னணியில் நிற்கிறார். அவர் கணிதத்தை விரும்பினாரிலர்; வேதாந்த, சித்தாந்தங்களை எல்லாம் அடியோடு வெறுத்தார். விஞ்ஞான சாத்திரங்களிலும் அவர் தலையிட்டாரில்லை. இதனாற்றான் அவரது நூல் நிலையத்தில் வெறும் இலக்கியங்களாகப் பதினாயிரம் நூல்களிருந்தன. அவற்றுள் கற்பனைக் கதைகள் சிலவேயாகும். அவை, பல மொழிகளிலுள்ள நூல்கள். இவ்வளவும் அழகுக்காக வாங்கி அலமாரியில் அடுக்கப்பட்டவை அல்ல. மெக்காலேயினால் ஒவ்வொரு நூலும் வரி வரியாக நுணுகிப் படிக்கப்பட்டதாகும். இத்துணை நூல்களைப் படித்தமையாற்றான், அவர், புலமையிற் சிறந்து விளங்கினார். பல நூல்களைப் படிக்கப் படிக்க அறிவு வளர்வது இயல்புதானே!

மெக்காலே ஒரு சிறந்த அரசியல் ஞானியாய் மிளிர்ந்தார். அரசியல் சீர்திருத்த

மசோதா பாராளுமன்றத்திற் கொண்டுவரப் பட்டபோது, ஆற்றிய சொற்பொழிவு ஒன்றே அவரது அரசியல் ஞானத்தின் பெட்பினை உணர்த்தப் போதுமானது. அவர் பதினைந்து வருடகாலம் அரசியல் வாழ்வில் கலந்திருந் தார். யூதர்களுக்கு உரிமை வழங்கச் செய் தார்; ஏழைகளின் குறைகளை அகற்றினர்; மக்களுக்கு அரசாங்க நிர்வாகத்தில் அதிக உரிமை வழங்க வழி செய்தார்; தபால் இலா காவில் சில மாறுதல்கள் புரிந்தார்; யுத்த மந்திரியாக இருந்து நற்றெண்டு ஆற்றினர். காப்பிரைட் மசோதா, இந்திய மசோதா, பாராளுமன்றத்தில் அப்பீல் கோர்ட் நீதி பதிக்கு இடங்கொடுத்தல் கூடாது என்பதைப் பற்றிய மசோதா ஆகியவை விவகரிக்கப்பட்ட போது, மெக்காலே ஆற்றிய சொற்பொழிவு கள் மன்ற அங்கத்தினர்களை வியக்கச் செய் தன. அவற்றில் அரசியல் அறிவு நிரம்பி யிருந்தது. மசோதாக்களை நுணுகி ஆராய்ந்து அவற்றில் உள்ள குறைகளை அறிதலில் அவ ருக்கு இருந்த திறமை வியக்கத்தக்கது. அவர் இங்ஙனமே, இந்திய மசோதா இரண்டாம் முறை மன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது உயர் பதவிகளில் தம் இஷ்டப்படி உத்தி யோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் கவர்

னர் - ஜெனரலுக்கு இருத்தல் கூடாதென்றும், போட்டிப் பரீட்சைகள் நடத்தும் முறை சிறந்தது என்றும் திருத்தங்கள் புகுத்தினர்.

சொற்பொழிவு ஆற்றுகையில் சொற்குழறல், வார்த்தை தடித்தல், நடுக்கம், தெளிவில்லாமல் இருத்தல், ஒன்றை எண்ணிக் கொண்டு மற்றென்று கூறல், எடுத்த விஷயத்தை விட்டு வேறு விஷயம் பேசுதல், தொடர்ச்சியின்றிக் கேட்போர்க்கு இனிமையின்றிப் பேசுதல், வெடிப்பாகப் பேசுதல் முதலிய சொற்பொழிவில் நிகழும் குற்றங்களில் ஒன்றேனும் அவர் பேசும்போது காணப்படுதல் அரிதினும் அரிது. அவரைப் போன்று பேசும் ஆற்றல் படைத்தவர் அவர் காலத்தில் இரண்டொருவரே ஆவர்.

மெக்காலே, இந்தியாவில் ஆறு வருட காலம் உத்தியோகம் வகிக்கலாம் என்ற நோக்கத்துடன் வந்தார். ஆனல், மூன்றரை வருடங்கள் கழிந்த பின், வங்காளத்தில் ஏற்பட்ட கொடிய நிலையும் பிணியும் அவரை அங்குத் தங்கியிருக்க முடியாதபடி செய்துவிட்டன. எனவே அவர், மூன்று வருடம் எட்டு மாத காலம் இந்தியாவில் பதவி வகித்து நிருவாகம் செலுத்திய பின், தம் மைத்துனர் ட்ரெவெல்யனுடனும் தங்கை ஹன்னுவுடனும் இந்தியாவை

விட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். மெக்காலே இந்தியாவை விட்டுப் போனது, பலருக்கு மனத்துயர் அளித்தது. அவருடைய நற்குணம், தமக்குக் கீழ் உள்ள உத்தியோகஸ்தர்களிடம் அன்புடன் நடந்துகொண்டமை முதலியனவே அனைவரும் அவரை விரும்புமாறு செய்துவிட்டன. மெக்காலேயின் உதார குணத்தை அக்காலத்தில் பாராட்டாதார் எவரும் இல்லை.

மாணவர்கள் மெக்காலேயின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து அறிந்து ஒழுகவேண்டிய அம்சங்கள் பல உள: கல்வியில் அவருக்கு இருந்த ஊக்கமும், பல நூல்களைப் படிப்பதிலும் பல மொழிகளைப் பயிலுவதிலும் அவருக்கு இருந்த உற்சாகமும், அதற்கென அவர் எடுத்துக்கொண்ட உழைப்பும், அதனால் அவர் அடைந்த பெருமையும் உயர்வும், மாணவர் உணரத் தக்கனவாகும். அவருடைய குணச் சிறப்புக் கவனிக்கத் தக்கது. எளியார்பால் இரக்கமும், செல்வர்க்கும் வறியர்க்கும் ஒரே வித நீதி வழங்கும் தன்மையும், மக்கள் அனைவரும் சமமே என்று கருதும் குணமும், தம் உடன் பிறந்தாரிடம் கொண்ட அன்பும், பெற்றோர்பால் காட்டிய மரியாதையும், பெரியார்களிடம் நடந்துகொண்ட பான்மையும் ஒவ்

வொருவரும் கவனிக்கத் தக்கவையாக அமைந்திருக்கின்றன. ஆதலால், இவ்வரலாற்றினைப் படிக்கும் அனைவரும் இச்சிறப்புமிக்க நலன்களைத் தங்கள் வாழ்விலும் அடைய முயற்சிப்பார்களாக.

The Liberty Press, G. T., Madras.